
# ஓராண்டு நினைவு மலர்



அமரர்

ப்ரம்மஸ்ரீ.க.ஷண்முகநாதக் குருக்கள்

20~05~2006

உ

கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் நல்லூர்,
திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# ப்ரம்மஸ்ரீ. கந்ததாஸ ஐயர்
# ஷண்முகநாதக் குருக்கள்

அவர்களின்

# ஓராண்டு நிறைவு
# ஞாபகார்த்த வெளியீடு

20.05.2006

தொகுப்பு:

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

உ

திருச்சிற்றம்பலம்



## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக்கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

## இலங்கை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## தமிழ்த்துறைத் தலைவர்
## பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா அவர்கள்
## மனமுவந்தளித்த அணிந்துரை

பிரம்மஸ்ரீ க. ஷண்முகநாதக் குருக்கள் பற்றிய எனது நினைவுக் குறிப்பு

ஈழத்துக் கல்விப் பாரம்பரியத்திலும் பண்பாட்டுப் பேணுகையிலும் பிராமண சமூகத்தினரின் பங்களிப்பு மகத்தானது. ஆரியச் சக்கரவர்த்திகள் என அழைக்கப்பட்ட யாழ்ப்பாண மன்னர்களும் பிராமண வம்சத்தைச் சேர்ந்தவர்கள் என்றே ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஈழ நாட்டிற்கு மேலைப் புலத்தவர்கள் வருவதற்கு முன்னர் கல்வி, புலமை, அரசியலாதிக்கம் முதலானவற்றிலே பிராமண சமூகத்தினரே சிறப்புற்று விளங்கினர் என்பதற்குச் சான்றுகள் உள.

பிராமண சமூகத்தினர் தமிழ், வடமொழி இலக்கிய இலக்கணங்களில் மாத்திரமன்றி வேதாகமங்களிலும், சைவ சித்தாந்தத்திலும், வைத்திய, சோதிடக் கலைகளிலும் ஆழமான புலமையுடையவர்களாக விளங்கினர். சரசோதிமாலை என்னும் சோதிட நூலை இயற்றிய நான்காம் பராக்கிரம பாகுவின் அவைக்களப் புலவர் போசராச பண்டிதர் பிராமண சமூகத்தைச் சேர்ந்தவரே என்பதும் குறிப்பிடத்தக்கது. ஈழத்துப் புலமைப் பாரம்பரியத்திலே நிலைத்து நிற்கும் ஆக்கங்களைத் தந்த வட்டுக்கோட்டைக் கணபதி ஐயர், கொச்சிக்கணேசையர், சுன்னாகம் வரத பண்டிதர், தும்பளை முத்துக்குமார சுவாமிக் குருக்கள், தும்பளை சுப்பிரமணிய சாஸ்திரிகள், வித்துவசிரோமணி கணேசையர் உள்ளிட்ட பல பேரறிஞர்கள் பிராமண சமூகத்தைச் சேர்ந்தவர்களே என்பதும் ஈண்டு மனங்கொள்ளத்தக்கது. ஈழத்துத் தமிழ், வடமொழிக் கல்வி வளர்ச்சிக்கு அந்தணர்கள் ஆற்றிய பணி தனியே ஆராயப்படவேண்டிய விடயப்பரப்பை உள்ளடக்கியதாகும்.

மேலைப்புலத்தவரின் வருகையும், அவ் வருகையோடு ஒட்டி நிகழ்ந்த கிறீஸ்தவப் பரம்பலும், கிறீஸ்தவச் சூழல் தந்த ஆங்கிலக் கல்வியும் பிராமணச் சமூகத்தினரின் வாழ்வியல் வழிமுறைகளுக்குத் தடைக்கற்களாகவே அமைந்தன. ஆசார சீலர்களாகவும், செந்தண்மை பூண்டு ஒழுகும் பண்பினைக் கடைப்பிடிப்பவர்களாகவும் சமய அனுட்டானங்களைப் பேணுபவர்களாகவும் பிராமணச் சமூகத்தினர் விளங்கியமையால் மேலைப்புலத்தவரின் கல்வி, சமய, பண்பாட்டு ஓட்டத்துடன் ஒத்து ஓடமுடியாத சமூகச் சூழ்நிலையிலே தமது பணிகளை மேற்கொண்டனர். மேலைப்புல அலைக்கு எதிராக நீச்சலடிக்கும் பணியைப் பிராமணர்களே செய்து வந்தனர். இச் சமூகத்தினருக்கு இருந்த இந்திய உறவும், தொடர்பும் பண்பாட்டுப் பேணுகைக்கு பக்கபலமாக இருந்தன எனலாம்.

யாழ்ப்பாண அரசின் இராசதானியாக நல்லூர் விளங்கிய காலத்திலே கோப்பாய் அதன் பிரதான ஆட்சி மையப் பகுதியாக இருந்தது. சைவமும் தமிழும் வளர்ந்த இக்கிராமத்திலே பல அறிஞர்களும் வித்துவான்களும் தோன்றியுள்ளனர். சைவமும் தமிழும் செழித்து வளர்ந்த கோப்பாய் கிராமத்திலேதான் பிரம்மஸ்ரீ ஷண்முகநாதக் குருக்கள் பிறந்து வளர்ந்தார்கள்.

தமிழையும் வடமொழியையும் குருகுலக் கல்வி மரபிலே பெற்ற ஷண்முகநாதக் குருக்களுக்கு ஆசார அனுட்டானங்கள் குடும்பச் சொத்தாகவே இருந்தன. அரச உத்தியோகம் பெறும் கல்வித் தகைமையைப் பெற்றிருந்தபோதிலும் கோயிற் கடமைகளே மேலானவை என்ற கருத்து நிலை வேரூன்றியிருந்தமையால் கோப்பாய் வீரபத்திர சுவாமியின் பணியே தம் தலையாய பணியென ஏற்றுக்கொண்டார்.

ஈழத்துச் சைவாலயங்களிலே நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்குப் பலவகையான தனித்துவமும் முக்கியத்துவமும் உண்டு. ஈழத்திற்கு, சிறப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு முன்மாதிரியாகத் திகழும் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திலே ஐம்பது ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றிய பெருமை இவர் ஒருவரையே சாரும் என எண்ணுகின்றேன்.

நல்லூரிலே, ஆறுமுகசுவாமி சந்நிதானத்திலே ஷண்முகநாதக் குருக்களைக் கண்டவர்கள் அவரது பக்தி பூர்வமான அபிஷேக ஆராதனைகளை இலகுவில் மறக்கமாட்டார்கள். தெய்வத்துடன் பேசுவது போல அவர் செய்யும் பூசைகள், தீபாராதனையின் அமைதி தவழும் அழகு என்றும் எம் நெஞ்சை விட்டு நீங்காதவை. நல்லூர் வழிபாட்டிற்கு வந்த பல இலட்சம் அடியார்களின் நெஞ்சிலே முருகனோடு ஷண்முகநாதக் குருக்களின் முகமும் நினைவிலே நிற்கும்.

பிரம்மஸ்ரீ ஷண்முகநாதக் குருக்கள் சிவபதமடைந்து ஆண்டு ஒன்று ஓடினாலும் அவரது தெய்வீகப் பணியும் பக்தி ஈடுபாடும் அடியார்கள் மனத்திலே என்றும் நினைவிலே நிற்கும். அவரது ஆன்மா பேரானந்தப் பெருவாழ்விலே நின்று நிலைக்கும்.

பின்குறிப்பு : ஈழத்துப் பிராமணச் சமூகத்தினரின் வாழ்வியல் சமயகரண அனுட்டானங்களோடு மாத்திரம் கணிக்கப்படாது கல்வி, புலமை, சமூக உறவு முதலான பலவகைகளிலும் ஆய்வு செய்யப்படவேண்டும் என்று அவாவுறுகிறோம்.

பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா
தலைவர், தமிழ்த்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை.

Prof. S. Sivalingarajah
Dean, Faculty of Tamil,
University of Jaffna,
Sri Lanka.

## வடக்கு கிழக்கு வலய
## உதவிப் பதிவாளர் நாயகம்
## பிரம்மஸ்ரீ ந. சதாசிவ ஐயர் அவர்கள்
## அளித்த சிறப்புரை

### சுடராகி ஒளிர்ந்தோன்

கோப்பாய் பிரதேசம் பல பெரியோர்களை தந்த புண்ணிய பூமியாகும். சண்முகநாதக் குருக்களைத் தந்ததால் அதன் பெயர் மேலும் ஒரு படி உயர்ந்தது. 1984-ல் திருநெல்வேலியில் ஐயாவின் புதல்வர்களின் வீட்டிற்கு அருகில் குடியேறிய நாள் முதல், நல்லூரானை இடையறாது தரிசிக்கத் தொடங்கிய நாள் முதல், ஐயா அவர்களையும் அவர் புதல்வர்களையும் அறியும் பாக்கியம் பெற்றேன்.

குருக்கள் என்னும் சொல்லிற்குரிய தோற்றத்தையும் அணிகலன்களையும் கொண்டவர் அவர். நல்லூர் முருகனாகவே காட்சி கொடுப்பார். ஆறுமுக சுவாமிக்கு அர்ச்சனை செய்வார். ஆலயத்துள் பொறுப்பாக எஜமானருடன் கூட விசுவாசமாக சாவிக் கொத்தை இடுப்பில் செருகியபடி செயற்படுவார். நவராத்திரி காலங்களில் காப்புக்கட்டி வாழை வெட்டுவார். வயதான காலத்தில் கூட 'இவர் எப்படி வெட்டப்போகிறார்?' என்று நாம் நினைத்த போதும் சிறப்பாக அவர் வாழை வெட்டிய காட்சி இன்றும் என் கண்முன்னே நிற்கிறது. அவர் கந்தபுராணத்துக்குப் பயன் சொல்லும்போது எல்லோர் மனமும் அதில் ஒரு தரம் கைகூப்பி இருக்கச் சொல்லும். முருகனுடனேயே ஒன்றி, முருகனையே பூசித்து, நல்லூர் முருகனுக்கே பணியாற்றிய அவர் தன்னுடைய கடமைகளையும் மறக்கவில்லை.

முத்துப்போல மூன்று பிள்ளைகளை ஈன்று, முறைப்படி வளர்த்து, கற்பித்து, நற்றொழில் பெற வழிவகுத்தார். மூவரும் ஒருவராக தந்தையை இறுதிவரை பார்த்ததையும் நான் இதில் குறிப்பிட்டே ஆகவேண்டும். வடக்கிருத்தல் எனும் வழமைக்கேற்ப தன் கடமை யாவற்றையும் முடித்தபின் தானுண்டு, தன்பாடுண்டு என பிள்ளைகளுடன் அமைதியாக இருந்து அமைதியாகவே இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், அமைதியாக வாழ்ந்து கடமைகளை எப்படிச் செய்யலாம் என்பதற்கு எடுத்துக்காட்டு. அவர் வழி பின்பற்றி வாழும் அவர் மைந்தர்களும் இதற்கேற்ற எடுத்துக்காட்டு. இப்படி மனிதர் யாவரும் வாழ்ந்தால் உலகத்திலே எத்தனை இன்பமான ஒரு மனித இனம் உருவாகும் என சிந்திப்போமாக. இவ்வாறே எல்லோரும் வாழ நல்லூர் கந்தன் காலடியில் சாந்திபெறும் அன்னாரின் ஆத்மா ஆசி அருள வேண்டும் என வேண்டுவோமாக.

நல்லூரான் வீதி நடந்தால் பிணி தீரும்.

**Sri. N. Sathasiva Iyer, Asst. Registrar General,**
North East Zone, Jaffna, Sri Lanka.

குருபாதம்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய ஸ்வாமிகள்

குருமஹா சந்நிதானம் ஆதிமுதல்வர்

ஆதீன முதல்வர்:

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய ஸ்வாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

# அனுதாபச் செய்தி

அன்புள்ளவர்களிற்கு,

சிவஸ்ரீ ஷண்முகநாதக் குருக்கள் அவர்களின் மறைவு அனைவரிற்கும் மன வேதனையை தந்தது. நல்லூர் வாழ் மக்களிற்கு மட்டும் அன்றி எங்கெங்கெல்லாம் தமிழன் வாழ்கின்றானோ அங்கெல்லாம் நல்லூர் முருகன் வாழ்கின்றார். அம்முருகனின் அருளை பெறுகின்ற அடியவர்கள் எல்லோருக்கும் ஐம்பது வருடங்களிற்கு மேலாக நித்திய பூசைகளையும் மகோற்சவ விழாக்களையும் நடத்த அனைவரினதும் அன்பையும் மதிப்பையும் பெற்றிருந்தவர்.

பிராமண குலத்தில் பிறந்து, பிராமண குலத்துக்கு ஏற்ற ஆறு கடமைகளையும் - ஓதல், ஓதுவித்தல், ஈதல், ஏற்றல், வேட்டல், வேட்பித்தல் கடமைகளை - நிறைவாக செய்து குருத்துவ கல்வியை முறையாகப் பயின்று, குருக்களாக, குருலட்சணத்துடன் வாழ்ந்த பெருமைக்குரிய சிவஸ்ரீ. சண்முகநாதக் குருக்கள் நல்ல குடும்பத் தலைவராகவும், அயலவரிற்கு நல்ல நண்பனாகவும் எடுத்த விடயத்தை செவ்வனே ஆற்றும் செயல் வீரனாகவும் வாழ்ந்த பெருமைக்குரியவர்.

சிவஸ்ரீ சண்முகநாதக் குருக்களின் மறைவு ஈடு செய்ய முடியாத இழப்பாகும். இவரின் மறைவு நினைவாக வெளியிடப்படும் மலர் சிறப்புடன் அமையவும், இவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் இறைவன் ஆசீர்வதிப்பாராக.

சிவஸ்ரீ சண்முகநாதக் குருக்கள் அவர்களின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(ஒ-ம்)
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய ஸ்வாமிகள்
26.03.06

**வல்வெட்டித்துறை**

**வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர ஸ்வாமி தேவஸ்தானம்**

**பிரதம குரு, கிரியா க்ரம ஜோதி, கிரியா கலாப முக்தாமணி**

**பிரம்மஸ்ரீ ப. மனோகர சிவாச்சாரியார் அவர்களின்**

**நினைவுரை**

## சண்முகாஞ்சலி

கோப்பாய் வீரபத்திரர் ஆலயம், நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தானங்களில் குருவாக இருந்து சிறப்புற செயலாற்றிய பிரம்மஸ்ரீ சண்முகநாத சிவாச்சாரியார் அமரத்துவமடைந்து ஒரு வருடம் பூர்த்தியாகின்ற நிலையில் அவர் நினைவாக நினைவு மலர் ஒன்று அவருடைய புத்திரர்களால் வெளியிடப்படுவது சாலப் பொருத்தமாகும்.

அமரர் அவர்கள் தாம் வாழ்கின்ற காலத்தில் மக்களுடனும், அடியவர் களுடனும் அன்புடனும் பண்புடனும் பழகி, மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்றவர். நல்லைக்கந்தன் ஆலயத்திற்கு வரும் அடியவர்கள் குருக்கள் அவர்களைக் காணவில்லை என்றால் மிகவும் கலங்குவார்கள். தமது துணைவி யாரை இழந்த நிலையிலும் முருகன் மீது கொண்ட அளவிலா பற்றுறுதி காரணமாக தமது தெய்வீகத் தொண்டை தொடர்ந்து தமது வாழ்நாள் பூராவும் செய்தவராவார்.

எமது தந்தையார் பிரம்ம ஸ்ரீ நீலகண்ட பரமேஸ்வரக் குருக்கள் அவர்கள் காலத்தில் வல்வை வைத்தீஸ்வர ஸ்வாமி தேவஸ்தான கும்பாபிஷேகம் மற்றும் மஹோற்சவங்களின் போது பிரம்மஸ்ரீ சண்முகநாத சிவாச்சாரியார் அவர்கள் ஆகம கிரியைகளில் கலந்து சிறப்பித்ததை இங்கு நினைவு கூருவது பொருத்தமாக இருக்கும்.

தனது மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப் பிள்ளைகளுடன் வாழ்ந்து இல்லறமாம் நல்லறத்தை விட்டு ஒருவரும் எதிர்பாராத வகையில் திடீரென முருகன் திருவடிகளை அடைந்து அமரராகி விட்டார். அவர் செய்த சேவைகள் என்றும் மறப்பதற்கில்லை. அமரத்துவமடைந்து ஒரு வருட மாகிய நிலையில் ஒளி வீசும் சண்முகமாக மலர் வெளிவருவதைப் பாராட்டி வாழ்த்தி ஆசீர்வதிக்கின்றேன்.

"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரம்மஸ்ரீ பரமேஸ்வர மனோகர சிவாச்சாரியார்
தலைவர்
சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்
யாழ்ப்பாணம்

தலைமை செயலகம்
குருகுலம்
பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

## கோப்பாய் வீரபத்ர சுவாமி ஆலய பிரதம குரு "பிரதிஷ்டா சிரோன்மணி" சிவஸ்ரீ சோ.இ. பிரணதார்த்திஹரக் குருக்கள் அவர்களின் அஞ்சலி

## மாண்புமிகு மாமா சிவஸ்ரீ ஸ்கந்த ஷண்முகநாதக் குருக்கள்

"அந்தணர் என்போர் அறவோர் - மற்றெவ்வுயிர்க்கும், செந்தண்மை பூண்டொழுகலான்"

யாழ்ப்பாணம் கோப்பாய் கிராமம் தமிழ், சைவம் ஆகியவற்றை வளர்த்த சான்றோர்கள் வாழ்ந்த பெரும்பதி. உள்ளத்தால் ஒருவராய், உருவத்தால் பலராய் வாழ்ந்த நாடு. அக்கிராமத்திற்கு அணி செய்யும் தளிகள் பலவுள. எனவே ஆலயங்கள் நிறைந்த திருவூராக விளங்கியது.

அந்தக் கிராமத்திலே தான் வீரபத்திரப் பெருமான் பத்திரகாளியம்பாள் சமேதராக நம்பினோர்க்கருள் புரியும் நாதனாக ஏறக்குறைய 150 ஆண்டுகளாக ஆன்மாக்களுக்கு - அங்கு வாழும் மக்களுக்கு - திருவருள் புரிந்து கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளார்.

அக்கோயில் ஸ்தானிக குருவாக ஐயாசாமி ஐயர், முத்துக்குமாரசாமி ஐயர், ஸ்கந்ததாஸ ஐயர் பரம்பரையில் வந்தவரே எனது மாமாவாகிய அமரர் சிவஸ்ரீ ஷண்முகநாதக் குருக்கள். அவரது பேரனாராகிய பிரம்மஸ்ரீ முத்துக் குமாரசாமி ஐயரே அக்கோவிலின் மூல விக்கிரகமாக எழுந்தருளியுள்ள வீரபத்திர பெருமானது திருவுருவத்தை தனது செலவிலேயே பிரதிஷ்டை செய்தார் என்பது வரலாறு.

1925ஆம் ஆண்டு பிறந்த குருக்கள் அவர்கள் 1962ஆம் ஆண்டு வரை தனது தெய்வப்பணியை - அறப்பணியை - அந்த ஆலயத்திலேயே செய்து வந்தார் என்பது பெருமைக்குரிய விடயம்.

ஸ்கந்ததாஸ குருக்கள் - நாகம்மா தம்பதிக்கு ஏக புத்திரனாக பிறந்த சர்மா அவர்கள் சிவபூசை, நித்திய கர்மாக்களில் வழுவாது சிறந்து விளங்கினார். கந்தசஷ்டி நோன்பியற்றி, கந்தன் அருளால் கதிர்காம யாத்திரை செய்து வந்த மைந்தனுக்கு பெற்றோர் ஷண்முகநாத சர்மா என பெயர் வைத்தனர். இதன் காரணமாகவோ என்னவோ தன் வாழ்வின் பிற்காலம் முழுவதும் நல்லைக் கந்தனுக்கு பணி செய்ய பூர்வஜென்ம பலன் வழி கோலியது எனலாம். தள்ளாத வயதிலும் கந்தன் பணியை தளராது செய்து வந்தார்.

"கையும் காலும் இயலும் வரை இறை தொண்டு செய்வேன்" என்ற அவரது வாக்கும் திண்ணிய நெஞ்சும் தெளிந்த நல்லறிவும் நமது வாழ்வுக்கு ஓர் எடுத்துக்காட்டு எனலாம்.

ஆகமத்தில் மட்டுமன்றி கந்தபுராணம், திருச்செந்தூர் புராணம் என்பவற்றை வாசித்து தெளிந்து அவற்றுக்குப் பொருள் சொல்லும் திறனும் அவருக்கிருந்த தமிழில் உள்ள திறமை எனலாம்.

இத்தகைய நமது சமூகப் பெரியார் இன்று நம் மத்தியில் இல்லை.

"நருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமை படைத்திவ் வுலகு"

குருக்கள் அவர்களை இறைவன் அழைத்துவிட்டான், அமரர் பணி செய்வதற்கு. அவரது வாழ்க்கை எமக்கு ஓர் எடுத்துக்காட்டு. அவரது குடும்பத்தினர் சீரும் சிறப்புடனும் வாழ்வது, அவரது வாழ்வின் பயனை எடுத்துக் காட்டுகிறது எனக் கூறமுடியும்.

அன்னார் ஆன்மா சாந்தியடைய முருகன் பாதங்களை சிந்தித்து வந்திப்போமாக.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

சோ. இ. பிரணதார்த்திஹரக் குருக்கள்
கோப்பாய்.

**உடுவில் மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் கோயில்**
**மூத்த ஸ்தானீக குருவும்**
**பிரம்மஸ்ரீ. ஷண்முகநாத சர்மாவின் தாய்வழி**
**ஒன்றுவிட்ட சகோதரருமாகிய**
**பிரம்மஸ்ரீ. சி. முத்துச்சாமி குருக்களின் ஆத்மசாந்தியுரை**

## சண்முகநாதக் குரு எனும் சான்றோன்

பல வளங்களும் சிறந்து விளங்கும் யாழ்ப்பாணத்தில் கோப்பாய் என்னும் கிராமத்திலே பிறந்து நீண்டநாள் வாழ்ந்து அமரரான பிரம்ம ஸ்ரீ க. சண்முகநாத குருக்கள், கோப்பாய் தெற்கு வீரபத்திரர் கோயில் ஸ்தானீக குரு முத்துக்குமாரசாமி குருக்கள், மீனாக்ஷி அம்மா (உடுவில்) தம்பதியின் மகனான கந்ததாஸ ஐயர் - நாகம்மா தம்பதியின் ஏக புத்திரனாக 22.01.1925 திகதியில் அவதரித்தார்.

தனது குலதெய்வமான கோப்பாய் வீரபத்திர சுவாமி அருள்பாலித்து வீற்றிருக்கும் ஆலயத்திற்கு பல திருப்பணிகள் செய்வித்து கும்பாபிஷேகமும் செய்து மகிழ்ந்தார். தனது வேத, ஆகம கல்வியின் பயனாக பல ஆலயங்களில் குருத்துவப் பணி செய்துள்ளார். வீரபத்திர சுவாமி ஆலய ஸ்தானீக குருவாக தனது தந்தையார் இருந்தபோது, தனது பேர்த்தியாரின் சொந்த இடமான உடுவில் மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் மஹோற்சவம் (கொடியேற்றம்) செய்து சிறப்படைந்தார்.

இவர் ஒரு சிறந்த ஓவியனாக இருந்ததால் பல சித்திரங்களையும், கோயில் கொடி படங்களையும் வரைந்துள்ளார்.

நல்லூர் முருகப்பெருமானிடத்தில் மிகுந்த பக்தி கொண்டு அவரின் பூஜைகளை ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகச் சிறப்பாகச் செய்து அடியார்கள் மனதில் நிறைவான இடத்தைப் பெற்றுக்கொண்டார்.

கந்தபுராணம் படிப்பது, பயன் சொல்வது இவருக்குக் கைவந்த கலை. நல்லூர் முருகன் சந்நிதியில் இதனைச் சிறந்த முறையில் செய்து வந்தார்.

தோன்றி, புகழோடு வாழ்ந்து எல்லாச் சிறப்புக்களும் கண்ட எமது அண்ணா சண்முகநாத குருக்கள் சென்ற 30.05.2005 திகதி வைகாசி அபர (கிருஷ்ண பட்ச) அட்டமி திதியில் இறைவன் பாதாரவிந்தங்களை அடைந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்
அன்புத் தம்பி
சி. முத்துச்சாமி குருக்கள்
அம்மன் கோயில், உடுவில். 12.04.2006

# Shivasri K.Shanmuganatha Gurukkal
# A Different Perspective

**By: Sri D.Guruswamy Iyer***

All those who knew Shivasri K. Shanmuganatha Gurukkal had known him as a good mannered, well educated, outspoken and unostentatious person. But there were certain facets of his life which were known only to a few people, chief among them being myself. The fact that he and I were inseparable companions during the early part of our life made me privy to many things about him which were hardly known to others.

A little known fact about him was that he was an ardent appreciator of Carnatic music. He and I attended to all musical entertainments that took place within cycling distance from our home and it was during such times I was able to gauge the depth of his passion for Carnatic music. We rarely missed any of the nathaswaram recitals, Kathaprasangams and vocal recitals that took place in Jaffna during our youth especially those that were rendered by eminent maestros from South India who visited Jaffna during the (Nineteen) Forties and Fifties. Such programmes included those of M.S. Subbulakshmi, M.L. Vasanthakumari, Musiri Subrahmania Iyer, T.N. Rajaratnam Pillai, Subramaniam Pillai, and Kathaprasangams of Variyar Swamigal. However, like Bhima in the Maha Bharatha who never divulged his unstinted devotion to Krishna, he never revealed his predilection to others during his life time.

Another little known fact about him was his inborn talent for artistic drawing. During his boyhood he engaged himself in drawing portraits of persons around him which bore striking resemblance to the subjects chosen. But, unlike today, the facilities for developing such talents were not available in rural areas at that time which prevented him from becoming a recognized artist.

However, this talent served him in good stead later in his life when he was acclaimed as an outstanding Decorator of Lord Murugan's image during festival times at the famous Nallur Kandaswamy Temple where he served as a High Priest for nearly fifty years.

He had a weakness of not being able to condone injustice whether it was perpetrated on him or on others. He was never known to be or accused of being cunning, shrewd or vile. He was forthright in his opinions and never spoke with a double tongue. Such behaviour, though ethically exemplary, earned the ire of many who worked with him.

His honesty and integrity were spotless to a fault that the Management of the temple entrusted him with duties that called for absolute trust and integrity. One of such tasks was to be in charge of the temple jewellery during festival times. These are some of the facets in the life of Shivasri. K. Shanmuganatha Gurukkal who has departed from us to a higher plane.

---

* The author is a Retired Senior Administrative Secretary (Dept. of Posts) and the brother-in-law of late Sri K. Shanmuganatha Gurukal.

ஜமதக்னி கோத்ரம்

## பிரம்மஸ்ரீ க. ஷண்முகநாதக் குருக்கள்

# பரம்பரை / வாழ்க்கை வரலாறு

அபி$^{3}$வாத$^{3}$யே
பா$^{4}$ர்க்க$^{3}$வ ச்யாவன ஆப்னவான ஔர்வ ஜாமத$^{3}$க்நிய
பஞ்சார்ஷேய ப்ரவராந் வித:
ஜமத$^{3}$க்நி கோ$^{3}$த்ர ஆஸ்வலாயன ஸூத்ர:
(இ)ருக் ஸாகா$^{2}$த்$^{4}$யாயி ஶ்ரீ .. ஸர்மன் நமாஹம்
அஸ்மி பூ$^{4}$:

எமது பாட்டாவான முத்துக்குமாரசாமி ஐயரின் குறிப்பின்படி எமது முன்னோர்கள் தமிழ்நாடு சிவகெங்கை பகுதியிலிருந்து 19ம் நூற்றாண்டில் இலங்கை யாழ்ப்பாணம் வந்தனர் என்று தெரிகிறது.

முத்துக்குமாரசாமி ஐயரின் தகப்பன் ஐயாசாமி ஐயர் யாழ்ப்பாணத்திலுள்ள கோப்பாய் என்ற ஊருக்கு வந்து அங்கு அமைந்திருக்க வீரபத்திர சுவாமி ஆலயத்தின் குருவாக இருந்த சிவசுவாமி ஐயர் என்பவரின் ஏகபுத்திரியாகிய குப்பம்மாளைத் திருமணம் செய்து சிவசுவாமி ஐயரின் பின் வீரபத்திர சுவாமி ஆலயத்தையும் பொறுப்பேற்று அதன் ஸ்தானீக குருவாக இருந்தார். அதன் பின்னரான தகவல்களே இங்கு இடம் பெறுகின்றன.

## முன்னுரை

தமிழ்நாட்டில் ஏனைய சமயத்தைச் சேர்ந்த அரசர்கள் ஆதிக்கம் பெற்ற காலத்தில் இந்துக் கோயில்களுக்கு ஆபத்து ஏற்பட்டது. அச்சமயத்தில் சில பிராமணர்கள் குறிப்பாக இராமநாதபுரம், தஞ்சாவூர் ஜில்லாக்களை சேர்ந்தவர்கள், கோயில்களில் இருந்த விக்கிரகங்களை பந்தனம் செய்து கடல் மார்க்கமாக இலங்கைத் தீவின் வடபகுதிக்கு எடுத்துச் சென்றார்கள். அந்நாளில் தமிழ் நாட்டின் பல துறைமுகங்களிலிருந்து யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, காங்கேசன்துறை, பருத்தித்துறை, தலைமன்னார் ஆகிய இடங்களுக்கு கப்பல் போக்குவரத்து இருந்தது.

யாழ்ப்பாணம் சென்ற சில பிராமணர்கள் தாங்கள் கொண்டுவந்த விக்கிரகங்களை வைத்து அங்குள்ள சைவ மக்களின் உதவியுடன் கோயில் களை உருவாக்கினார்கள். தமிழ் நாட்டில் நிலைமை சீர்திருந்தியதும் சில பிராமணர்கள் அங்கு திரும்பிச் சென்றார்கள். ஆனால் கோயில்களை உருவாக்கிய பிராமணர்கள் இலங்கையிலேயே தங்கிவிட்டார்கள். என்றாலும்

அவர்கள் தமிழ்நாட்டிலிருந்து பெண்களை திருமணம் செய்து அழைத்து வருவதும் தமிழ்நாட்டிலிருந்து பிராமணர்கள் யாழ்ப்பாணம் வந்து குடியேறுவதும் 1955ஆம் ஆண்டுவரை சகஜமாக இருந்தது.

யாழ்ப்பாண மக்கள் சைவ சமயத்தின்மீது ஆழ்ந்த அன்பும் பக்தியும் கொண்டவர்கள். பிராமணர்கள் ஆகம விதிகளில் சொல்லப்பட்டவாறு ஆலயங்களை நிர்மாணித்து பூஜைகள் நடத்தினர். சைவ சமய தத்துவங்களை மக்கள் நன்கு விளங்கிக்கொள்ளும் வண்ணம் பல்வேறு உற்சவங்களை ஆலயங்களில் ஏற்படுத்தினார்கள்.

பிராமணர்கள் தமது அறிவையும் வித்வத்தையுமே மூலதனமாகக் கொண்டிருந்தனர். அவர்கள் தமிழ்நாட்டிலிருந்து தமது பொருள் பண்டங்களை எடுத்து வரவில்லை. தாங்கள் நிரந்தரமாக யாழ்ப்பாணத்தில் தங்கிவிடப் போகிறோம் என அவர்கள் எண்ணினார்களா? ஆலயங்களை அமைப்பதற்கு மக்கள் பெருமளவு உதவி செய்தனர். அந்நிய ஆட்சி நிலவியதால், மக்களுக்குத் தமது மொழி, சமயம், பண்பாடு ஆகியவற்றைக் காப்பாற்ற வேண்டும், வளர்க்க வேண்டும் என்ற உணர்வு இருந்தது.

## கோப்பாய் வீரபத்ர சுவாமி ஆலயம்

தென்கோவை எனச் சிறப்புப் பெற்ற கோப்பாய் தெற்கு பகுதியில் உள்ள வீரபத்ர சுவாமி ஆலயம் ஆரம்பத்தில் ஒரு சிறு குடிலில் அமைந்திருந்தது. அக்குடில் ஆலயம் இருந்த இடம் ஒரு மூதாட்டிக்குச் சொந்தமாக இருந்தது. அவருக்கு சந்ததி இல்லாத காரணத்தால் அந்த இடத்தை அம்மூதாட்டி கோயிலுக்கே அர்ப்பணித்து விட்டார்.

## ஐயாசாமி ஐயர்

ஐயாசாமி ஐயர் தனது மனைவி குப்பம்மாளுடன் ஆலயத்திற்குத் தென்புறமாக அமைந்திருந்த தமது வீட்டில் வாழ்ந்து வந்தார். ஆலயத்தில் ஆகம கடமைகளை நிறைவேற்றி வந்ததுடன் புரோஹிதராக இருந்து ஊர்மக்களின் வைதிக கடமைகளையும் நிறைவேற்றி வந்தார்.

1. *ஐயாசாமி குப்பம்மாள்* தம்பதியின் சந்ததி:

(1) முத்துக்குமாரசாமி ஐயர் - சர்மா (2) லக்ஷ்மி அல்லது செல்லம்மா
(3) சரஸ்வதி அம்மா (4) பரமசாமி ஐயர் (5) தெய்வயானைஅம்மா

குறிப்பு : ஐயாசாமி ஐயரின் உடன்பிறந்தோர் : சின்னையர் (பின்நாளில் காப்புக்கட்டிச் சின்னையர் என அழைக்கப்பட்டார்.) மற்றும் தங்கம்மாள்.

இந்த வரலாற்றில் ஐயாசாமி ஐயர் பரம்பரை விபரம் தரப்பட்டுள்ளது. சின்னையர் பரம்பரை விபரம் முழுமையாகத் தெரியவில்லை. பெண்வழி உறவினர் பற்றி தெரிந்த விபரங்கள் அநுபந்தத்தில் தரப்பட்டுள்ளன.

1 (4) பரமசாமி ஐயர்

கொழும்புத்துறை என்னும் ஊரில் திருமணம் செய்து வாழ்ந்து வந்தார். சந்தானம் இல்லை.

*2. முத்துக்குமாரசாமி ஐயர் (சர்மா)*

ஐயாசாமி ஐயரின் சிரேஷ்ட புத்திரனாகிய முத்துக்குமாரசாமி சர்மா பல வகையிலும் ஒரு வித்தியாசமான மனிதராகக் காணப்பட்டார். நல்ல சிவந்த மேனியும் ஓரளவு உயரமான தேகவாகும் கொண்ட இவரது கம்பீரத் தோற்றமும் ஆளுமையும் கூர்மையான அறிவும் ஊரில் மிக்க செல்வாக்கை இவருக்குத் தேடிக் கொடுத்தன. யாராவது ஏதும் பிழை செய்தால் அவரால் பொறுக்க முடியாது. நற்பழக்கங்களை எல்லோரும் கைக்கொள்ள வேண்டும் என்பதில் மிகவும் கண்டிப்பானவர்.

ஊக்கம், விடாமுயற்சி உடைய இவர் குடிலாக இருந்த வீரபத்ரசுவாமி ஆலயத்தை கற்றளி கொண்டு கட்டுவித்ததுடன் மூலஸ்தானத்தில் பஞ்ச உலோகங்களாலான விக்ரகத்தை தனது சொந்தச் செலவில் பிரதிஷ்டை செய்வித்தார். (அது வரையில் வீரபத்ர சுவாமி ஆலயம் என அழைக்கப்பட்ட போதிலும் மூலஸ்தானத்தில் வேலாயுதமே பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தது.) திருமஞ்சன தீர்த்தக்கிணறு, மஹாமண்டபம், எழுந்தருளி கோயில், உள் மண்டபம், வெளி மண்டபம் ஆகியவற்றை ஊர் மக்கள் உதவியுடன் கட்டுவித்தார். மேலும் ஆலய பராமரிப்புக்கென ஊர் மக்களைக் கொண்டு சில நெல் வயல்களை கோயில் சொத்தாக எழுதுவித்தார். ஊர்மக்களும் அவருக்கு மிக மகிழ்ச்சியுடன் உதவினர். இவரது காலம் அப்பகுதியின் பொற்காலமாக விளங்கிற்று என எமது சிறு வயதில் அவ்வூர் முதியவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறோம்.

முத்துக்குமாரசாமி சர்மாவிற்குப் பெண் கொடுக்கப் பல பிராமணர்கள் முயற்சி செய்தார்கள். உடுவில் அம்மன் கோயில் ஸ்தாநீகர் கௌண்டின்ய கோத்ரம் இராமநாதக் குருக்களின் வழி வந்த நாராயணக் குருக்களின் ஏக புதல்வியான மீனாக்ஷி அம்மாள் இவரின் கைப்பிடிக்கும் பாக்கியம் பெற்றார்.

முத்துக்குமாரசாமி சர்மா மீனாக்ஷி தம்பதியின் சந்ததி:

(1) இராஜராஜேஸ்வரி (2) புவனேஸ்வரி (3) கந்ததாஸ ஐயர்

*3. கந்ததாஸ ஐயர் (1890 - 1954)*

இவர் பொன்னுத்துரை ஐயர், கந்தசாமி ஐயர், மாந்தை ஐயர் எனப் பல்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டார். தந்தை செல்வாக்குடன் இருந்ததால் உறவினர் பலரும் நெருக்கமாக இருந்தனர். இதனால் அருமையாய்ப் பிறந்த இந்த ஆண்மகனை அவரவர் தமக்கு விரும்பிய

பெயரைச் சொல்லி அழைத்ததால் இவ்வாறு இவருக்குப் பல பெயர்கள் வழங்கலாயிற்று.

கந்ததாஸர் மென்போக்கு உடையவர் கஷ்டம் உணராத வாழ்க்கை. இதனால் இவர் எல்லோருடனும் மிக இனிமையாகப் பழகினார். இவர் கோபப்பட்டதைக் கண்டவர் எவருமிலர். எவருக்குமே 'இல்லை' என்று சொல்லாத மனப்பக்குவம் கொண்டிருந்தார்.

கந்ததாஸ ஐயர் மக்களுக்கு ஆன்மீக அறிவைப் புகட்டியும், அவர்கள் நோயுற்ற வேளைகளில் மூலிகைகள் கொண்டு வைத்தியம் செய்தும், இளஞ்சிறார்களுக்குப் பாடங்கள் சொல்லிக் கொடுத்தும், பிணிகளால் வருந்துவோருக்கு "பார்வை பார்த்தல்", "நூல் கட்டுதல்" போன்ற செயற்பாடுகள் மூலம் அவர்களின் பிணிகளைப் போக்கியும் தொண்டு செய்துகொண்டு இருந்தார்.

அந்நாளில் பிராமணர்கள் சோதிடம், வைத்தியம் என்பவற்றில் நிரம்ப அறிவு பெற்றிருந்தார்கள். பார்வை பார்ப்பது, நூல் கட்டுவது என்பவை ஒரு வகையான மனோதத்துவ சிகிச்சை முறையாகும். (மேலை நாட்டு முறையில் மருத்துவ விஞ்ஞானம் வளர்ந்து பல்வேறு மருந்துகள் பாவனைக்கு வந்துவிட்ட இந்நாளில் பழைய முறைகளில் நம்பிக்கை தளர்ந்து விட்டது. அதனால் அம்முறைகளைக் கையாள்வோரும் நாடுவோரும் அருகி விட்டார்கள். ஆனால் அக்காலத்தில் பலர் இம்முறைகள் மூலம் பிணிகள் நீங்கி குணமடைந்தனர்.)

*******

இவர் சிறு பிள்ளையாக இருந்த காலகட்டத்தில், அதாவது 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில், யாழ்ப்பாணத்தில் பாரிய சமூக மாற்றங்கள் நிகழ்ந்து வந்தன. அதுவரையில் யாழ்ப்பாண மக்களின் வாழ்வுக்கு விவசாயம், சிறு கைத்தொழில், குறைந்த அளவிலான அயல்நாட்டு வாணிபம் என்பவையே வழிசெய்தன. கல்வி, தாய்மொழியூடாக குருகுல முறையிலும் திண்ணைப் பள்ளிகள் வாயிலாகவும் புகட்டப்பட்டு வந்தது. இவற்றில் எல்லாம் பெரும் மாற்றங்கள் ஏற்பட ஆரம்பித்தன.

அந்நியர் ஆட்சியின் கீழ் கிறீஸ்தவ பாதிரிமார்களின் வருகை அதிகரித்ததுடன் அவ்வாறு வந்த பாதிரிமார்களினால் ஆரம்பிக்கப்பட்ட மேல்நாட்டு முறையிலான பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது. இருபதாம் நூற்றாண்டில் இலங்கையை ஆட்சி செய்த ஆங்கிலேயர்கள் இந்தியா, பர்மா, மலாயா, சிங்கப்பூர் போன்ற பல நாடுகளையும் ஆட்சி செய்தனர். அவர்களுக்குத் தமது ஆட்சி நிர்வாகத்தைக் கொண்டு நடத்தப் பெருமளவு ஆட்கள் தேவைப்பட்டனர். இந்த நாடுகளில் எல்லாம் ஆங்கில அறிவு பெற்ற போதியளவு ஆட்களைப் பெற்றுக்கொள்ள ஆங்கிலேயர்களால் முடியவில்லை.

எனவே அயர்லாந்து, ஸ்கொட்லாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து கிறீஸ்தவ பாதிரிமார்களை இந்நாடுகளுக்கு அனுப்பி ஆங்கிலக் கல்வியைப் போதிக்கத் தொடங்கினார்கள்.

யாழ்ப்பாண மக்களில் வசதி படைத்தோர் படிப்படியாக ஆங்கிலக் கல்வி கற்க ஆரம்பித்தார்கள். ஆங்கிலக் கல்வி கற்றவர்களுக்கு அரசாங்க அலுவலகங்களில் வசதி வாய்ப்புகளுடன் 'உத்தியோகம்' கிடைத்தது. சிங்கப்பூர், மலாயா போன்ற நாடுகளுக்கும் உத்தியோகம் பெற்று சென்றார்கள். இதனால் கஷ்டப்பட்டேனும் தமது பிள்ளைகளுக்கு ஆங்கிலக் கல்வி அளிக்கவேண்டும் என்ற எண்ணம் பெற்றோர் மத்தியில் பெருகலாயிற்று.

உத்தியோகத்துக்காக வெளியூர்களுக்கும் வெளி நாடுகளுக்கும் சென்ற யாழ்ப்பாண தமிழ் மக்கள் தமது மொழி, பண்பாடு என்பவற்றை மறந்து வாழ்க்கை முறைமைகளையும் மாற்றிக் கொண்டனர். (இது சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன்பிருந்த நிலை. இன்றைய கால கட்டத்தில் வெளிநாடுகளில் வாழும் யாழ்ப்பாண தமிழர்கள் தமது மொழி, பண்பாடு என்பவற்றைப் பேணுவதோடு வளர்க்கவும் பாடுபடுகின்றனர்).

அக்கால கட்டத்தில் இவ்வாறு பலர் மாறினாலும் யாழ்ப்பாணத்திலேயே வாழ்ந்து வந்த மக்கள் தமது பாரம்பரிய தொழில்களைச் செய்து வந்ததுடன் தமது பண் பாட்டையும் கைவிடாது வாழ்ந்தனர். ஆனால் இம்மக்களின் பொருளாதார நிலை வீழ்ச்சியடைந்து சென்றது. அதனால் ஆலயங்களின் நிலையும் க்ஷீணித்துக் கொண்டு சென்றது.

இந்த மாற்றங்கள் பிராமணர்களைப் பெரிதும் பாதித்தன. கல்விமுறை மாறிவிட்டதால் அவர்களால் நடத்தப்பட்ட திண்ணைப் பள்ளிக்கூடங்கள் செய லிழந்தன. ஆங்கிலக் கல்வி கற்ற சிலர் சைவ சமய சடங்குகளை மூடநம்பிக்கை என வர்ணித்து ஒதுக்கத் தொடங்கினார்கள். பிராமணர்கள் கல்வி அறிவு நிரம்பப் பெற்றிருந்தார்கள். ஆனால் அவர்களது அறிவு தமிழ், சமஸ்கிருதம் ஆகிய மொழிகள் வாயிலாக வந்தவை.

தமது சொந்த பண்பாட்டுக் கோலங்களை மாற்றி, அந்நிய கலாசார மரபுகளை உள்வாங்கிக் கொள்ளத் தலைப்பட்டுவிட்ட ஒரு சமுகத்தின் மத்தியில் சொந்தப் பண்பாட்டுக் கோலங்களைப் பேணுவதையும் அவற்றை வளர்ப்பதையுமே தமது வாழ்வியலாகக் கொண்டிருந்த பிராமணர்களின் நிலை அவலமாகியது.

[பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள் "தெணியான்" எழுதிய 'பொற்சிறையில் வாடும் புனிதர்கள்' என்ற நாவலுக்கான அறிமுக உரையிலே பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

"தவிர்க்க முடியாதபடி பரவிவரும் நவீனவாக்கம் ஏற்படுத்தும் சமூக மாற்றங்களினூடே ஏற்படும் பாரம்பரியச் சிதைவு, பாரம்பரியத்தைப் போற்றுவதையே தமது தொழிலாகக் கொண்ட ஒரு தொழிற் குழுவினரை - புரோஹிதர்களை - எவ்வாறு பாதிக்கின்றது என்பது பூமணி எழுதிய 'நைவேத்தியம்' என்ற நாவலில் நன்கு சித்தரிக்கப்பட்டுள்ளது."]

ஆலயங்கள் மக்கள் வழங்கும் நிதி உதவியிலேயே தங்கியிருந்தமையால் மக்கள் வேற்று கலாசார முறைமைகளை உள்வாங்கத் தொடங்கி அவர்களின் சிந்தனையும் மாற்றமடைந்தபோது கோயில்களின் வருமானம் குன்றி அவை க்ஷீணிக்கலாயின. ஆலயங்களை நம்பி வாழ்ந்த பிராமணர்களின் வாழ்க்கை நிலையும் பாதிப்படைந்தது.

சில பிராமணர்கள் புதிய முறை பாடசாலைகளில் கல்வி கற்று ஆசிரியர்களாக

தொழில் பெற்றனர். இன்னும் சிலர் ஏனைய மக்களைப் போல ஆங்கிலக் கல்வி கற்று அரச உத்தியோகம் பெற்றனர். ஆனால் ஆங்கிலக் கல்வி பெரும்பாலும் கிறீஸ்தவ பள்ளிகளிலேயே கற்பிக்கப் பட்டு வந்ததால் பல பிராமணர்கள் தமது பிள்ளைகளை அப்பள்ளிகளுக்கு அனுப்ப விரும்பவில்லை. எப்படியிருப்பினும் குறிப்பிடத்தக்களவு பிராமணர்கள் ஆங்கிலக் கல்வி கற்று அரச உத்தியோகம் பெற்றதுடன் பின்னர் உயர் பதவிகளையும் வகித்தார்கள்.

யாழ்ப்பாண பிராமணர்களிடம் பொதுவாக ஒரு சிறப்பம்சத்தை அவதானிக் கலாம். ஏனைய சமூகத்தினரில் பெரும்பாலானோர் உத்தியோகம் பெற்றதும் தமக்குரிய பாரம்பரியங்களைக் கைவிட்டு மறந்து விடுகின்றனர். ஆனால் யாழ்ப் பாணத்து பிராமணர்கள் எந்த உத்தியோகமானாலும் சமயக் கடமைகளை மறவாமல் தொடர்ந்து செய்து வந்துள்ளனர். இன்று வரை இந்தப் பண்பு தொடர்கிறது.

*****

கந்ததாஸ ஐயரைப் பொறுத்தவரை மேலே குறிப்பிட்ட மாற்றங்களால் அவர் அவ்வளவாகப் பாதிக்கப்படவில்லை. அவருக்குச் சுமார் 55 வயது ஆகும்வரை தந்தையார் முத்துக்குமாரசாமி சர்மா திடகாத்திரமுடன் இருந்து கோயில் பொறுப்புகளை நிர்வகித்து வந்தார். இதனால் கந்ததாஸ ஐயருக்கு நிறைய நேரம் கிடைத்தது. ஊர் மக்களுடன் உரையாடுவதும் அவர்கள் குறைகளைக் கேட்டறிந்து தன்னாலான உதவி செய்வதுமே அவரது முக்கியமான நடவடிக்கைகளாக இருந்தன.

நோயுற்றவர்களுக்குப் பார்வை பார்ப்பதில் இவர் பிரசித்தி பெற்றவர். இவரிடம் பார்வை பார்ப்பதற்காக தூர இடங்களிலிருந்தும் பலர் வருவதுண்டு. வீரபத்ர சுவாமி ஆலயத்தின் தற்போதைய அம்மன் சந்நிதி அப்போது எழுந்தருளி வீரபத்ரரின் சந்நிதியாக இருந்தது. அதன் எதிரில், தெற்கு வீதியில் இருந்த நெல்லி மரத்தின் கீழ் அமர்ந்திருந்து பார்வை பார்ப்பார். அவரது கனிவான பேச்சும், அன்பான பார்வையுமே பலருக்கு அருமருந்தானது.

கந்ததாஸ ஐயர் தனது அத்தை மகளான நாகம்மாவை திருமணம் செய்தார். இத்தம்பதிக்கு பெண் மகவு ஒன்று பிறந்தது. ஆனால் அம்மகவு பிறந்து சில மணிநேரத்தில் இறந்துவிட்டது. அதன்பின் சுமார் 10 வருட காலம் இவர்களுக்கு மகப்பேறு இல்லாதிருந்தது. அதனால் மனக்கவலை அடைந்து தென்னிலங்கையிலுள்ள பிரசித்தி பெற்ற கதிர்காமத் திருப்பதிக்கு யாத்திரை சென்றனர். அக்காலத்தில் கதிர்காமப் பயணம் கடினமானதாகவும் ஆபத்துக்கள் நிறைந்ததாகவும் இருந்தது. சுமார் பன்னிரண்டு மைல்கள் கொடிய விலங்குகள் வாழ்ந்த காட்டின் நடுவே மாட்டுவண்டிப்பாதை வழியாக நடந்து சென்றே கோயிலை அடைய முடியும்.

கதிர்காமக் கந்தன் திருவருளால் இவர்களுக்கு ஒரு ஆண்மகவு பிறந்தது. அக்குழந்தைக்கு சண்முகநாதசர்மா எனப் பெயரிட்டனர். நீண்ட காலம் தவமிருந்து பெற்ற பிள்ளை என்பதாலும் அதன் பின்னர் வேறு குழந்தைகள் பிறக்காததாலும் சண்முகநாத சர்மாவை மிகவும் செல்லமாக வளர்த்தனர்.

## 4. சண்முகநாத சர்மா (22.01.1925 - 30.05.2005)

மிகவும் செல்லமாக வளர்க்கப்பட்ட சண்முகநாத சர்மா கோப்பாய் தெற்கில் அமைந்திருந்த நாவலர் பாடசாலையில் கல்வி கற்றார்.

ஆறுமுகநாவலர் என்ற சைவப் பெரியார் மேலை நாட்டு முறையில் பள்ளிக்கூடங்களை நிறுவி அப்பள்ளிகளில் குருகுல முறை அடிப்படையில் கல்வி கற்பிக்கப்பட ஏற்பாடு செய்தார். இத்தகைய சைவப் பாடசாலைகளை யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் நிறுவினார். [இவர் யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி தமிழ் நாட்டிலுள்ள சிதம்பரத்திலும் மடங்கள், பள்ளிக்கூடங்கள் ஸ்தாபித்தார்.] நாவலரால் நிறுவப்பட்ட பள்ளிகள் ஒவ்வோர் ஊரில் ஒவ்வொரு பெயரில் அமைந்திருந்தாலும் அவை எல்லாம் பொதுவாக நாவலர் பாடசாலை என்றே மக்களால் அழைக்கப்பட்டன. கோப்பாய் நாவலர் பாடசாலைக்கு கோப்பாய் சைவத்தமிழ் கலவன் பாடசாலை என்று பெயர்.

சண்முகநாத சர்மா சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திர பரீக்ஷையில் (S.S.C.) முதலாம் பிரிவில் சித்தியடைந்தார். தமிழ் மொழியைச் சிறப்புறக் கற்றதோடு சம்ஸ்கிருதத்தையும் கற்று பாலபண்டிதர் பட்டம் பெற்றார். இதனால் ஆசிரியராகப் பணியாற்ற அவருக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. எனினும் ஒரே பிள்ளையாக இருந்த சண்முகநாதசர்மா வீரபத்ர சுவாமி ஆலயத்தைப் பொறுப்பேற்க வேண்டி இருந்த காரணத்தால் ஆசிரிய பணிக்குச் செல்லவில்லை.

தென் இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணம் வந்து வட கோப்பாயில் சம்ஸ்கிருத வகுப்புகள் நடத்திக் கொண்டிருந்த ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளிடம் வேத ஆகமங்கள் பயின்று சிவாச்சாரியருக்குரிய தகுதி பெற்றார். தனது பதினேழாவது வயதிலேயே மேற்படி தகுதிகளைப் பெற்றுவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

தகப்பனாரும் பேரனாரும் இன்னமும் வீரபத்ர சுவாமி ஆலய நித்திய, நைமித்திய கருமங்களை ஆற்றி வந்தனர். எனவே இவர் நல்லூரிலுள்ள சரித்திரப் பிரசித்தி வாய்ந்த "நல்லூர் கந்தசுவாமி கோயில்" என அழைக்கப்படும் முருகன் ஆலயத்தில் விசேஷ தினங்களில் நடைபெறும் பூஜைகளில் பங்குபற்றி வரலாயினார்.

சண்முகநாத சர்மா உறவினரான சாந்தாதேவியை 1943ஆம் ஆண்டு திருமணம் செய்தார்.

இவர்களின் சந்ததி: (1) உமாகாந்தன் (2) ஸ்ரீதரன் (3) சதானந்தன்

சண்முகநாதசர்மாவுக்கு ஆசார்ய அபிஷேகம் நடத்தப்பெற்று சிவாச்சாரியர் பட்டம் பெற்றார். அதன்பின் அவரது பெயர் சண்முகநாதக் குருக்கள் என வழங்கி வரலாயிற்று.

முத்துக்குமாரசாமி சர்மா 1949ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார்.

*****

1948 பெப்ரவரி நாலாம் திகதி ஆங்கில ஆட்சி முடிவுக்கு வந்தது. சுதந்திர இலங்கையின் அரசில் ஒரு முக்கிய அதிகாரியாக கோப்பாய் பதியைத் தாயகமாகக் கொண்டவரும், வீரபத்ர சுவாமி ஆலயம் அமைந்திருந்த இடத்தை அக்கோயிலுக்கென அன்பளிப்பு செய்த மூதாட்டியின் உறவினர் வழிப் பேரனுமாகிய கந்தையா வைத்யநாதன் பணியாற்றினார். அதிகாரியாக (Permanent Secretary to the Ministry of Defence) இருந்த அவரை, அவரின் திறமை காரணமாக செனட் சபை உறுப்பினராக்கி அமைச்சர் பதவிக்கு நியமித்தார்கள். காணி, வீடமைப்பு அமைச்சராக அவர் பணியாற்றினார்.

*****

திருகோணமலை மாவட்டத்திலுள்ள கந்தளாய் என்னும் திருப்பதியில் குளக்கோட்டன் என்ற பிரசித்தி பெற்ற மன்னனால் நிர்மாணிக்கப்பட்ட சிவன் கோயில் அந்நியர் ஆட்சிக் காலத்தின்போது கவனிப்பாரற்று சிதிலமடைந்திருந்தது. இக்கோயில் புனர் நிர்மாணம் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. கும்பாபிஷேகத்தை நடத்திய சிவாச்சாரியார் களுள் ஒருவராக சண்முகநாதக் குருக்கள் பணியாற்றினார்.

*கந்ததாஸ ஐயர் மறைவு*

கந்தளாய் ஆலய கும்பாபிஷேகத்தில் ஒரு சிவாச்சாரியராகப் பணியாற்றிய சண்முகநாதக் குருக்களுக்கு நல்ல வாய்ப்பு ஒன்று கிட்டியது.

கொழும்பிலுள்ள ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் கோயிலில் ஒரு சிவாச் சாரியாராகப் பணியாற்றும் சந்தர்ப்பம் அவருக்குக் கிடைத்தது. பொறுப்பு ஏற்பதற்காக சண்முகநாதக் குருக்கள் தனது மைத்துனரான குருஸ்வாமி ஐயருடன் கொழும்புக்கு பயணமானார்.

அன்று (1954) ஆவணி சதுர்த்தி. மகனை சுன்னாகம் ரெயில்வே ஸ்டேஷனில் வைத்து வழியனுப்பி விட்டு வீடு திரும்பிய கந்ததாஸ ஐயர், வீரபத்ர சுவாமி கோயிலில் "பிள்ளையார் கதை" படித்து விட்டு இரவு படுக்கைக்குப் போனார். உறங்கச் சென்றவர் மீளாத்துயிலில் ஆழ்ந்தார். படுக்கையிலேயே அவரது உயிர் பிரிந்தது. அன்பும் அடக்கமும் கொண்டு அமைதியான வாழ்க்கை வாழ்ந்த கந்ததாஸ ஐயரின் மறைவும் அமைதியாகவே நிகழ்ந்தது. அதிகாலையில் கொழும்புக்குத் தகவல் அனுப்பப்பட்டது. சண்முகநாதக் குருக்களும் மைத்துனர் குருஸ்வாமி ஐயரும் உடனடியாக அங்கிருந்து காரில் புறப்பட்டு மாலையில் வீடு வந்து சேர்ந்தார்கள். கந்ததாஸ ஐயரின் இறுதிச் சடங்குகளை சண்முகநாதக் குருக்கள் நிறைவேற்றினார்.

தந்தையின் மறைவுக்குப் பின் சண்முகநாதக் குருக்கள் வீரபத்ர சுவாமி ஆலயத்தைப் பொறுப்பேற்றுக் கொண்டார். அவருக்கு உதவியாக அவரது தந்தை வழி மைத்துனரான சோ. இரத்தினசபாபதி ஐயர் (கண்ணாடி ஐயா)

சேர்ந்து கொண்டார். மைத்துனர் மூத்தவர் என்பதாலும் கல்வியறிவு மிக்கவர் என்பதாலும் சண்முகநாதக் குருக்கள் அவரின் ஆலோசனை கேட்டு கோயில் கடமைகளைச் செய்துவந்தார்.

வீரபத்ர சுவாமி கோயிலுக்கு அண்மித்தாக நாச்சிமார் கோயில் என்ற சிறிய கோயில் உள்ளது. அக்காலத்தில் இக்கோயில் நவராத்திரி தினங்களில் மட்டும் கதவு திறக்கப்பட்டு விசேஷ பூஜைகள் நடைபெறும். விஜயதசமியன்று கன்னிவாழை வெட்டும் விழாவுடன் கோயில் சாத்தப்படும். இக்கோயில் நவராத்திரி விழாவையும் கந்ததாஸ ஐயரும் பின்னர் சண்முகநாதக் குருக்களும் செய்து வந்தனர்.

மைத்துனர் உதவியாக இருந்தமையால் சண்முகநாதக் குருக்கள் முன்னர் போல விசேஷ தினங்களில் நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்குச் சென்று பணியாற்றினார். இவ்வாறு சென்று வந்ததால் நல்லூர் கந்தசுவாமி கோயிலில் நடைமுறையிலிருந்த முன்னேற்றமான சில அம்சங்களை வீரபத்ர சுவாமி கோயிலிலும் அறிமுகப்படுத்தினார். குறிப்பாக, குறித்த நேரங்களில் பூஜை செய்தல், தீப கற்பூர ஆரத்தியின் போது ஒரு ஒழுங்கு முறையைக் கைக்கொள்ளல் என்பவற்றைச் சொல்லலாம். சண்முகநாதக் குருக்கள் தீப, கற்பூர ஆரத்தி செய்யும் போது வெளியில் நின்று பார்ப்பவர்களுக்கு ஓம் என்ற ஓங்கார வடிவில் தெரியும்.

1955ஆம் ஆண்டு கோப்பாய் கிறீஸ்தவ கல்லூரி பரிசளிப்பு விழாவுக்கு சிறப்பு விருந்தினராக அமைச்சர் ஸர் கந்தையா வைத்யநாதன் வந்திருந்தார். அச்சமயம் சண்முகநாதக் குருக்கள் அவரை அணுகி வீரபத்ர சுவாமி கோயில் வரலாற்றை அவருக்குச் சொன்னார். வீரபத்ர சுவாமி கோயிலை புனருத்தாபனம் செய்து விஸ்தரிப்பதற்கு உதவுமாறு கேட்டுக் கொண்டார். அக்காலகட்டத்தில் ஸர் கந்தையா வைத்யநாதன் மன்னார் மாவட்டத்திலுள்ள பாடல்பெற்ற தலமாகிய திருக்கேதீஸ்வரம் கோயிலின் புனருத்தாபன முயற்சியில் ஈடுபட்டிருந்தார். ஆகவே தனது சொந்த ஊரிலுள்ள கோயிலை புனருத்தாபனம் செய்ய உடனடியாக இணங்கினார். அவரது ஊக்குவிப்பாலும் ஊர் மக்களின் உதவியினாலும் கோயில் புனருத்தாபனம் செய்யப்பட்டது.

*வீரபத்ர சுவாமி கோயில் புனருத்தாபனம்*

வீரபத்ர சுவாமி கோயிலின் கர்ப்பக் கிருகம், அர்த்த மண்டபம் என்பவை ஏற்கெனவே முத்துக்குமாரசாமி சர்மாவின் முயற்சியால் கற்றளி கொண்டு கட்டப்பட்டிருந்தன. வெளி மண்டபமும் பெரிய தூண்களுடன் உயரக் கொட்டகையாகக் கட்டப்பட்டிருந்தது.

புனருத்தாபனம் செய்யப்பட்டபோது மஹாமண்டபம், உள் மண்டபம், வசந்த மண்டபம் என்பவை புதுப்பித்துக் கட்டப்பட்டன.

கர்ப்பக்கிருகத்தின் மேல் கட்டப்பட்டிருந்த விமானத்தில் பிரம்மா, விஷ்ணு,

தக்ஷிணாமூர்த்தி சிற்பங்கள் அமைக்கப்பட்டன. மேலும், பிள்ளையார், சூரியன் ஆகிய மூர்த்திகளுக்கான சிலாவிக்ரகங்களும் தமிழ்நாட்டிலிருந்து தருவிக்கப்பட்டன. பிரபல சிற்பாசாரியரான செல்லக்கண்ணு ஸ்தபதியாரா லேயே இச் சிற்பங்களும் விக்ரகங்களும் அமைக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் உட்பிரகாரத்தில் பிள்ளையார், முருகன், சூரியன், பைரவர் ஆகிய மூர்த்திகளுக்கான கோயில்களும் அமைக்கப்பட்டன. மடைப்பள்ளி, களஞ்சியம், வாகனசாலை, சுற்றுமதில் என்பன ஏற்கெனவே இருந்தவை திருத்திக் கட்டப்பட்டன.

கோயில் அயலில் வாழ்ந்த இரத்தினம் பொன்னம்மா தம்பதி முன்பு ஒரு அசையாமணி கொடுத்திருந்தவர்கள், இப்போது அதற்கு ஒரு கூண்டுக் கோபுரம் அமைத்துக் கொடுத்தார்கள். மற்றொரு அயலவரான மலாயன் பென்ஷனர் சுப்பையா செல்லப்பா என்பவர் சகடை ஒன்று செய்வித்துக் கொடுத்தார்.

கோயிலில் குதிரை வாகனம், இடப வாகனம் என்பவை ஏற்கெனவே இருந்தன. சதாசிவம் என்பவரது முயற்சியால் ஊரவர்கள் ஒன்று சேர்ந்து ஆட்டுக்கடா வாகனம் ஒன்று செய்து கொடுத்தார்கள்.

1956 ஆம் ஆண்டு தை மாதம் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

***சண்முகநாதக் குருக்கள் காலத்தில் வீரபத்ர சுவாமி கோயில்***

1956ஆம் ஆண்டு கும்பாபிஷேகத்தின் பின்னர் ஆலயம் பல சிறப்புக்களுடன் வளர்ச்சி அடையத் தொடங்கியது. சண்முகநாதக் குருக்கள் தான் நல்லூரில் பயின்ற ஒழுங்கமைவான முறைகளை வீரபத்ர சுவாமி ஆலயத்தில் அறிமுகப் படுத்தியதானது கிராமப்புறக் கோயில்களில் ஒரு புதுமையான மாற்றமாகக் கருதப்பட்டது.

கும்பாபிஷேகத்தின் பின் பஜனைக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் கோயிலில் பஜனை இடம்பெற்றது. இந் நிகழ்ச்சி ஊரிலிருந்த சிறுவர் சிறுமியர் தேவாரம், திருவாசகம் மற்றும் திருமுறைப்பாடல்களை மனனம் செய்யவும் பாடவும் பயிற்சி பெற உதவியது. பஜனையின் முடிவில் பூஜை நடைபெற்று சுண்டல் பிரசாதம் வழங்க சண்முகநாதக் குருக்கள் ஏற்பாடு செய்தார்.

வருடந்தோறும் சிவராத்திரி விழா மிகச் சிறப்பாக நடக்கும். சண்முகநாதக் குருக்கள் நல்லூருக்குப் போய் வந்ததால் பல சமயப் பெரியார்களின் அறிமுகம் கிட்டியது. அவர்களை அழைத்து வந்து சமயப் பிரசங்கங்கள் நிகழ்த்தச் செய்வார்.

வீரபத்ர சுவாமி ஆலய சிவராத்திரி விழாவின் முக்கிய அம்சமாக சங்கீத

கதாப்பிரசங்கம் நடக்கும். வருடாவருடம், பெரும்பாலும், இதனை ஒருவரே நிகழ்த்தி வந்தார். அல்வாய் என்னுமிடத்தைச் சேர்ந்த பண்டிதர் ஆ. கணபதிப்பிள்ளை ஆசிரியர் கொழும்பில் பணியாற்றிய போதிலும் விடுமுறை பெற்று வந்து கதாப்பிரசங்கத்தை நிகழ்த்துவார். சண்முகநாதக் குருக்கள் நல்லூரைச் சேர்ந்த அந்தகக் கலைஞரான இரத்தினம் என்பவரை கதாப் பிரசங்கத்துக்கு வயலின் வாத்ய கலைஞராக ஏற்பாடு செய்வார். இந்த நிகழ்ச்சியின் புகழ் அயலூர்களிலும் பரவியது.

அக்காலத்தில் கதாப்பிரசங்கம் (கதா காலட்க்ஷேபம்) செய்வதில் தமிழ்நாடு திருமுருக கிருபானந்த வாரியார் சிறப்புப் பெற்றவர். அவர் அவ்வப்போது யாழ்ப்பாணத்துக்கு வந்து சிலகாலம் தங்கி பல்வேறு இடங்களில் கதாப் பிரசங்கம் நிகழ்த்துவது வழக்கம். அவரது கதாப்பிரசங்கம் ஓர் இடத்தில் நடக்கிறதென்றால் அதனைக் கேட்பதற்காகத் தூர இடங்களிலிருந்தும் மக்கள் கார்களிலும், மாட்டு வண்டிகளிலும், சைக்கிள்களிலும், நடந்தும் கூட ஆயிரக் கணக்கில் வந்து கூடுவார்கள். எனவே விசாலமான மைதானம் போன்ற இட வசதி உள்ள ஆலயங்களில் மட்டுமே அவரது கதாப்பிரசங்க நிகழ்ச்சி ஏற்பாடு செய்வார்கள்.

1958ஆம் ஆண்டு வாரியார் சுவாமிகள் யாழ்ப்பாணம் வந்திருந்தார். அந்தத் தடவை கோப்பாய் வீரபத்ர சுவாமி ஆலயத்திலும் வாரியாரின் கதாப்பிரசங்கம் நடைபெற வேண்டும் என சண்முகநாதக் குருக்கள் விரும்பினார். அச்சமயம் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த அவரின் மைத்துனரான குருஸ்வாமி ஐயரும் அதே விருப்பம் கொண்டிருந்தார்.

அவ்வருடம் ஆகஸ்ட் மாதத்தில் கொழும்பில் பெரும் கலவரம் நடந்து பெரும்பாலான தமிழ் மக்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்து தங்கி இருந்தார்கள். கொழும்பில் உத்தியோகம் பார்த்து வந்த குருஸ்வாமி ஐயரும் தமது குடும்பத்துடன் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்தார். வாரியாரின் பிரசங்கம் கேட்பதில் சண்முகநாதக் குருக்களுக்கும் குருஸ்வாமி ஐயருக்கும் அபார விருப்பம். எங்கெங்கெல்லாம் அவரது பிரசங்கம் நடக்கிறதோ, அங்கங் கெல்லாம் சென்று கேட்பார்கள். ஆகவே வாரியாரின் பிரசங்கத்தை முன்னேற் றம் பல கண்டுவந்த வீரபத்ர சுவாமி ஆலயத்திலும் நடத்த அவர்கள் ஆர்வம் கொண்டதில் வியப்பில்லை.

குருஸ்வாமி ஐயர், இரத்தினசபாபதி ஐயரின் மூத்த மகனும் பிற்காலத்தில் கோவை மகேசன் எனப் பெயர் பெற்றவருமான மஹேஸ்வர சர்மா, சண்முக நாதக் குருக்களின் மூத்த மகன் பதினான்கு வயது சிறுவன் உமாகாந்தன் ஆகியோர் ஊர்மக்கள் உதவியுடன் நிதி சேகரித்தார்கள்.

வாரியாரின் கதாப்பிரசங்கம் ஏற்பாடு செய்வதானால் மிகுந்த செலவாகும். தனது பக்கவாத்தியக்காரர்களையும் அவரே தன்னுடன் அழைத்து வருவார். மேலும் பந்தல் போட, மின்சார விளக்குகள் பொருத்த ஒலிபெருக்கி அமைக்க

என பல்வேறு செலவுகள் ஏற்படும். வசதி குறைந்த மக்கள் வாழும் சிறு கிராமத்தில் இது எத்துணை கஷ்டம்!

யாழ்ப்பாணத்தில் வாரியாரின் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்ய பொறுப்பாக இருந்தவர்களிடம் சண்முகநாதக் குருக்கள் சென்று வீரபத்ர சுவாமி ஆலயத்தில் பிரசங்கம் நிகழ்த்த ஒரு தினத்தை ஒதுக்கித் தருமாறு கேட்டார். அவர்கள் தாங்கள் முதலில் இடத்தைப் பார்க்க வேண்டும் என்று கூறி ஆலயத்தை வந்து பார்த்தார்கள். பார்த்துவிட்டு இது உங்களுக்குக் கட்டுபடி ஆகாது, இடமும் போதாது என்று சொல்லிவிட்டார்கள்.

வீரபத்ர சுவாமி ஆலயம் பரப்பளவில் அவ்வளவு பெரியதல்ல. வீதிகளும் விசாலமானவையல்ல. ஆனாலும் தொண்டர்கள் மனம் தளர்ந்து விடவில்லை. கோயில் அயலில் சில காணிகள் பற்றை மண்டிக்கிடந்தன. அவற்றைத் துப்பரவு செய்தபோதும் இன்னமும் இடம் போதாமலிருந்தது. வீரபத்ர சுவாமி ஆலயத்தின் தென்கிழக்கு முகப்பில் தென்னிந்தியா சிதம்பரம் கோயிலுக்குச் சொந்தமான பெரிய காணியும் அதன் நடுவில் ஒரு வைரவ கோயிலும் உண்டு. நடராஜர் என்ற சைவக்குருவின் பொறுப்பில் அவை இருந்தன. அதன் எல்லை முட்கம்பி வேலி போடப்பட்டு பாதுகாக்கப்பட்டிருந்தது. அந்த முட்கம்பி வேலியை அகற்ற நடராஜர் பெருமனதுடன் இசைவு தந்தார். நல்ல விசாலமான இடம் கிடைத்தது. நல்ல மனதுடன் செய்யும் நற்கருமங் களுக்கு எல்லோரும் உதவுவர் என்பது இதிலிருந்து தெளிவாகிறது.

குறித்த நாளில் வாரியார் சுவாமிகளின் கதாப்பிரசங்கம் வீரபத்ர சுவாமி கோயில் முன்றலில் நடைபெற்றது. கோப்பாய் கிராமம் அதுவரை கண்டிராத பெரும் ஜனக்கூட்டம் அன்று வீரபத்ர சுவாமி ஆலய முன்றலில் கூடியது. வாரியார் அவர்கள் "சம்பந்தாண்டான் வாதமும் கம்பத்து இளையனார் காட்சியும்" என்ற பொருளில் இரவு பத்து மணி தொடங்கி அதிகாலை ஒரு மணி வரை கதாகாலட்சேஷபம் செய்தார். யாழ்ப்பாணத்தில் இதுபோன்ற சிறு கிராமக் கோயிலில் வாரியாரின் கதாப்பிரசங்கம் இதற்கு முன்னரோ பின்னரோ இடம்பெற்றதேயில்லை.

வீரபத்ர சுவாமி கோயிலில் நவக்கிரக சந்நிதி இருக்கவில்லை. புதிதாக அமைக்க இடமும் இல்லை. சண்முகநாதக் குருக்கள் இதைப்பற்றி யோசித்தார். தனது உதவியாளரான மைத்துனருடனும் ஆலோசித்தார். நவக்கிரகங்களில் முக்கியமானவராகக் கருதப்படும் சனீஸ்வர பகவானுக்கு ஒரு கோயில் எழுப்ப முடிவு செய்து, ஊர் மக்களின் உதவியுடன் கோயில் எழுப்பி சனீஸ்வர பகவானை பிரதிஷ்டை செய்தார்.

1960ஆம் ஆண்டளவில் நீதிமன்ற முதலியாராக இருந்த கோப்பாய் தெற்கு கிராமத்தைச் சேர்ந்த ஒருவர் ஓய்வு பெற்று சொந்த ஊரில் குடியிருக்கவென வந்தார். ஆலயத்தில் நடேசர் பிரதிஷ்டை செய்யப்பட வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்தார். இதற்கு சண்முகநாதக்

குருக்களும் இரத்தினசபாபதி ஐயரும் சம்மதிக்கவில்லை. நடேசர் பிரதிஷ்டை செய்வதானால் ஆகம முறைப்படி கோயிலில் போதிய இடம் வேண்டும்; பிரகாரங்கள் வேண்டும்; நடேசருக்குச் செய்ய வேண்டிய பூஜை அபிஷேகங்கள் நிகழ்த்த வருமானத்திற்கு வகை செய்யவேண்டும் என எடுத்துக் கூறினார்கள். ஆனால் அவர் தனது பணபலம் செல்வாக்கு என்பவற்றைப் பயன்படுத்தி தான் சொன்னதை சாதித்தார். இந்த விடயத்தில் ஏற்பட்ட மனக்கசப்பு சண்முகநாதக் குருக்கள் வீரபத்ர சுவாமி ஆலயத்தை விட்டு நீங்கி நிரந்தரமாக நல்லூருக்குச் செல்ல கால்கோளாயிற்று.

வீரபத்ர சுவாமி ஆலயத்தை இரத்தினசபாபதி ஐயரும், பின்னர் அவரது இளைய மகனாகிய பிரணதார்த்திஹரக் குருக்களும் பொறுப்பேற்று நடத்தினர். இரத்தினசபாபதி ஐயர் காலமானபின்னர் பிரணதார்த்திஹரக் குருக்களும் 1995-ல் அக்கோயிலை விட்டு விலகவே, ஊரவர்களான சோமசுந்தரம் மாஸ்டர் மற்றும் சிலர் நல்லூரிலிருந்த சண்முகநாதக் குருக்களை நாடி மீண்டும் பொறுப்பேற்குமாறு கேட்டார்கள். அவர் தனக்கு வயதாகிவிட்டதால் தன்னால் முடியாதெனக் கூறி, புங்குடுதீவிலிருந்து இடம் பெயர்ந்து நல்லூரில் வாழ்ந்து வந்த ஒருவரை ஏற்பாடு செய்து கொடுத்தார். அத்துடன் வீரபத்ர சுவாமி ஆலயத்திற்கும் இக் குடும்பத்துக்குமிடையில் இருந்த உறவு முறிவடைந்ததாகக் கருதப்பட்டாலும் 1999ஆம் ஆண்டின் பின்னர் பிரணதார்த்திஹரக் குருக்களும் அவரது புதல்வர்களும் மீண்டும் பொறுப்பேற்றதன் பின்னர் தொடர்பு மீண்டும் ஏற்பட்டுள்ளது.

*சண்முகநாதக் குருக்கள் நல்லூருக்கு நிரந்தர நியமனம்*

1964ஆம் ஆண்டு சண்முகநாதக் குருக்கள் நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு நிரந்தர சிவாச்சாரியராக நியமனம் பெற்றார். பதினைந்து ஆண்டுகள் விசேஷ தினங்களில் வந்து பணியாற்றிய பின்னர் 64ஆம் ஆண்டிலிருந்து சுமார் முப்பத்தெட்டு ஆண்டுகள் தொடர்ச்சியாக நல்லூரில் பணியாற்றியுள்ளார். போதிய வருமானமின்மை, இருப்பிட வசதிக்குறைவு போன்ற பல இடர்களுக்கு மத்தியிலும் அவர் தொடர்ந்து பணியாற்றியதன் காரணம் அவருக்கு முருகன் மீதிருந்த அளவற்ற பக்தியேயன்றி வேறில்லை. கதிர்காமக் கந்தனின் அருளால் பிறந்தவரல்லவா!

நல்லூர் முருகனுக்கு அவர் ஆற்றிய பணிகள் பலப்பல. அவற்றுள் ஆறுமுகசுவாமியின் புனருத்தாபன மஹாகும்பாபிஷேகத்தை பிரதம குருவாக இருந்து நடத்தி வைத்தமை குறிப்பிடத்தக்கது. ஆறுமுகசுவாமி சந்நிதியிலேயே அவர் பெரும்பாலும் பூஜை, அர்ச்சனை செய்வது வழக்கம். யாராவது அவரைக் காணவேண்டுமானால் ஆறுமுகசுவாமி வாசலுக்குத்தான் செல்வார்கள்.

ஆலய வருடாந்த மஹோற்சவத்தின்போது வசந்த மண்டப பூஜையை சிறப்பாக, அழகாக செய்வார். உற்சவங்களின் போது தெய்வத் திருவுருவங்

களை அலங்காரம் செய்வார். சண்முகநாதக் குருக்கள் நன்றாக ஓவியம் வரைவார். ஆனால் அதை அவர் யாருக்கும் வெளிப்படுத்தியதில்லை. வீரபத்ர சுவாமி கோயில் கும்பாபிஷேகத்தின் போது கோபுர வாயிலின் இரு மருங்கிலும் துவாரபாலகர் படங்களை வரைந்து வைத்தமை ஒன்றே அவர் வெளியாருக்குத் தெரியத்தக்கதாக செய்துவைத்த ஓவியப் பணியாகும். ஆனால் வீட்டில் ஏராளமான தெய்வத் திருவுருவங்களை வரைந்து வைத்திருந்தார். அவரது இந்த கலைத்திறமை நல்லூரில் தெய்வத் திருவுருவங்களை அலங்கரிக்கும் பணியை சிறப்பாக செய்ய உதவியது. திருவுருவங்களை அலங்கரிக்கும் தங்க நகைகளை கோயில் அறங்காவலர் சண்முகநாதக் குருக்கள் பொறுப்பிலேயே கொடுத்து வைப்பது வழக்கம்.

நல்லூர் ஆலயத்தில் நடைபெறும் நவராத்திரி பூஜையில் பெரும்பாலும் சண்முகநாதக் குருக்களே பிரதம குருவாக இருந்து நடத்திவைப்பார். விஜயதசமியன்று நடைபெறும் மஹிஷாசுர சம்ஹாரத்தின் போது கன்னிவாழை வெட்டும் வைபவத்தை திறம்பட செய்வார்.

நல்லூர் கந்தன் ஆலயத்தில் பணியாற்றிய வேளையிலும் கோப்பாய் நாச்சிமார் கோயிலில் நடைபெறும் நவராத்திரி விழாவை ஆலய அறங்காவலர் செல்லப்பாவின் விருப்பத்திற்கமைய சண்முகநாதக் குருக்களே பிரதம குருவாக இருந்து நடத்திவந்தார். எவ்வளவு நேரமானாலும் அவர் நல்லூரில் பூஜை முடித்து வரும்வரை மக்கள் பொறுமையாகக் காத்திருப்பது மனம் நெகிழ வைக்கும். அவர்கள் நினைத்திருந்தால் தங்கள் அயலிலுள்ள யாராவது ஒரு குருக்களை அழைத்து நவராத்திரி விழாவை நடத்தியிருக்க முடியும். ஆனால் அவர்கள் சண்முகநாதக் குருக்கள் மீது வைத்திருந்த அன்பும் பக்தியுமே அவர்களை அவருக்காகக் காத்திருக்க வைத்தன.

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் சிவாச்சாரியராகப் பணியாற்றியதுடன் கோயிலில் கந்தபுராணம் படித்தல், படிப்புக்குப் பயன் சொல்லுதல் ஆகிய பணிகளையும் செய்து வந்தார்.

1992 ஆம் ஆண்டளவில் சங்கர நாராயணர் கோயில் ஒன்று உருவாக்க வேண்டும் என சண்முகநாதக் குருக்கள் பெருவிருப்பம் கொண்டார். அரும்பாடு பட்டு அன்புள்ளங்களின் அனுசரணையுடன் சங்கர நாராயணர் விக்கிரகத்தை வார்த்து எடுப்பித்துவிட்டார். ஆனால் தனியாகக் கோயில் எழுப்ப முடியவில்லை. இருக்கின்ற கோயில்களில் ஒன்றிலேயே விக்கிரகத்தை பிரதிஷ்டை செய்யத் தீர்மானித்தார். பலமாக யோசனை செய்து ஈற்றில் அத்தியடி பிள்ளையார் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யத் தீர்மானித்தார். ஆலய அறங்காவலரும் அந்த ஆலயத்தில் பிரதிஷ்டை செய்ய இடமளித்தார். சங்கர நாராயணரை அத்தியடி பிள்ளையார் கோயிலில் பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் செய்துவைத்தார். இந்த இடத்தில் ஒரு குறிப்பைச் சேர்க்க வேண்டும். சண்முகநாதக் குருக்களின் மனைவி சாந்தாதேவியின் தகப்பனார்

துரைசாமி ஐயர் இந்த அத்தியடி பிள்ளையார் கோயிலில் அவரது தகப்பன் குருவாக இருந்தபோது ஆலயத்தின் தெற்கு வீதியில் இருந்த அவர்களின் வீட்டில்தான் பிறந்தார். எதிர்பாராத விதமாக சங்கரநாராயணர் பிரதிஷ்டை செய்யப்பட்ட தினம் துரைசாமி ஐயரின் பிறந்த நாளாகவும் அமைந்தது தெய்வ சங்கல்பமேயன்றி வேறில்லை.

ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் நல்லூரானின் பணியில் ஈடுபட்டிருந்த சண்முகநாதக் குருக்கள், தனது எழுபத்தேழாவது வயதில், 2002ஆம் ஆண்டு சித்திரை மாதம் தனக்கு உற்ற துணையாக விளங்கிய தர்ம பத்தினியை இழந்தபின்னர், நிரந்தர பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் எல்லோரும் நல்ல வாழ்வு பெற்றுள்ளதைக் காணும் பாக்கியம் பெற்ற சண்முகநாதக் குருக்களின் வாழ்வு நிறை வாழ்வாக அமையப்பெற்று 2005ஆம் ஆண்டு மே மாதம் 30ஆம் நாள் முருகன் திருவடி நீழலை அடைந்தார்.

ஓம் ஸாந்தி! ஸாந்தி!! ஸாந்தி!!!

### *5. 1. உமாகாந்தன் (பிறப்பு 03.03.1944)*

ஆரம்பக் கல்வியை கோப்பாய் நாவலர் பாடசாலையில் கற்றபின் கோப்பாய் கிறீஸ்தவ கல்லூரியில் சேர்ந்து ஆங்கில மொழிமூலம் சிரேஷ்ட பாடசாலை தராதரப் (S.S.C.) பத்திரம் பெற்றார். அதன்பின் கொக்குவில் தொழினுட்ப கல்லூரியில் மின்னியலும் லண்டனிலிருந்து தபால்மூலக் கல்வியாக வானொலி தொழினுட்பக் கல்வியும் பயின்று (CGRTT) தராதரம் பெற்றார். மூன்று வருட காலம் யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கத்தில் கணக்கேட்டுப் பதிவாளராக (Ledger Clerk) பணியாற்றினார். 1969ஆம் ஆண்டு தபால் திணைக்களத்தில் தபாலதிபராக நியமனம் பெற்று 22 ஆண்டுகள் அப்பதவியில் பல முன்னேற்றங்கள் பெற்று பணியாற்றினார். இச் சேவைக் காலப்பகுதியில் ஹற்றன், கொழும்பு, அம்பாறை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பணியாற்றியுள்ளார். தபால் தந்தி திணைக் களத்தால் வானொலி சமிக்ஞை தகவல் துறையில் சிறப்புப் பயிற்சி அளிக் கப்பட்டு அம்பாறை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் வானொலி சமிக்ஞையாளராகவும் பணியாற்றினார்.

வானொலி ஆர்வலரான இவர் உலகின் பல்வேறு வானொலி நிலையங் களோடு தொடர்பு கொண்டிருந்ததோடு வானொலி ஆர்வலர்களை இணைத்து "தமிழ்ஒலி வானொலி நேயர் மன்றம்" என்ற அமைப்பையும் ஏற்படுத்தினார். இலங்கை வானொலி நிகழ்ச்சிகளில் நேரில் கலந்து கொண்டதுடன் பல்வேறு வானொலி நிலையங்களின் நிகழ்ச்சிகளில் ஆக்கங்கள் மூலம் பங்குபற்றினார். இவரது தமிழ் ஆக்கங்கள் இலங்கை வானொலி, வெரித்தாஸ் வானொலி என்பவற்றிலும் ஆங்கில மொழி ஆக்கங்கள் டோய்ஸ்ச வெலே (Deutsche

Welle), நெதர்லாந்து வானொலி (Radio Netherlands), பெல்ஜியம் வானொலி (Belgies Radio and Television - BRT), சுவீடன் வானொலி (Radio Sweden International) மற்றும் சுவிஸ் வானொலி (Swiss Radio International) என்பவற்றிலும் ஒலிபரப்பாகின. வானொலி நிகழ்ச்சிகளில் மட்டுமன்றி பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பவற்றிலும் இவரது ஆக்கங்கள் பிரசுரமாகின. அத்துடன் 1981இல் இருந்து 1986 வரை தமிழ் ஒலி என்ற காலாண்டு சஞ்சிகையையும் பதிப்பித்து வெளியிட்டு வந்தார். ஜேர்மனியிலிருந்து ஒலிபரப்பாகும் Deutsche Welle வானொலிக்கு சமிக்ஞை கண்காணிப்பாளராக (Frequency Monitor) சுமார் 12 ஆண்டுகள் பணியாற்றினார்.

1990ஆம் ஆண்டு நெதர்லாந்து வானொலி நடத்திய பொது அறிவுப் போட்டியில் முதற்பரிசு வென்றார். நெதர்லாந்து வானொலி உலகளாவிய ரீதியில் நடத்திய போட்டி ஒன்றில் முதற்பரிசு பெற்ற முதலாவது இலங்கையர் என்ற புகழையும் இவர் பெற்றார். (The Island 31.03.1991).

அரசாங்கத்தால் அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட ஒரு சலுகையைப் பயன்படுத்தி (Circular 44/90) 1991 ஜனவரி 1ந் திகதி தனது நாற்பத்தேழு வயதிலேயே அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றார். அதன்பின் சுமார் ஒன்றரை ஆண்டுகள் உதயன் என்ற புகழ்பெற்ற நாளிதழின் ஆசிரிய பீடத்தில் ஒரு உதவி ஆசிரியராகப் பணியாற்றினார்.

1992 டிஸம்பர் 1ந் திகதி செஞ்சிலுவை சர்வதேசக் குழுவில் (International Committee of the Red Cross) ஒரு உத்தியோகத்தராகச் சேர்ந்து 1997 ஏப்ரல் வரை அதன் யாழ்ப்பாண அலுவலகத்தின் தேடுதல் பிரிவில் பணியாற்றினார். 1997 மே 1ந் திகதி தொடக்கம் ஐ.சி.ஆர்.சி.யின் மட்டக்களப்பு அலுவலகத்துக்கு பதவி உயர்வுடன் மாற்றம் பெற்று அங்கு பரப்புரை ஊடக தொடர்பாளராக (Dissemination / Media Liaison Officer) பணியாற்றி 2002 ஜூன் மாத முடிவில் ஓய்வு பெற்றார்.

தற்போது கணினி வலையமைப்பில் www.webbozz.com என்ற வெப்சைட்டை ஏற்படுத்தி நிர்வகித்துவருகிறார்.

உமாகாந்தன் தனது வாழ்க்கைத் துணைவியாக வல்வை வைத்தீஸ்வரன் கோயில் பிரதமகுரு காலஞ்சென்ற பரமேஸ்வரக் குருக்களின் கனிஷ்ட புத்திரியும் தற்போதைய பிரதம குரு பிரம்மஸ்ரீ மனோகரக் குருக்களின் சகோதரியுமான மங்கை என்கின்ற மங்கையர்க்கரசியை 1972ஆம் ஆண்டு திருமணம் செய்தார்.

இத்தம்பதியரின் சந்ததி: (1) சிவஸாந்தி (2) வித்யாசரணன்
(3) வேணுகிருஷ்ணா

இவர்களுள் வேணுகிருஷ்ணா நாட்டில் நிலவிய உள்நாட்டு யுத்தத்தின் காரணமாக தனது பதினெட்டாவது வயதில் உயிரிழந்தார்.



ப்ரம்மஸ்ரீ க. ஷண்முகநாதக் குருக்கள் அவர்கள்
விஜயதசமி அன்று நல்லூர் முருகன் கோவிலில்
கன்னி வாழை வெட்டுகிறார்.



ப்ரம்மஸ்ரீ க. ஷண்முகநாதக் குருக்கள் அவர்கள்
யாழ்ப்பாணம் அத்தியடி பிள்ளையார் கோவிலில்
சங்கரநாராயணர் விக்கிரகத்தை பிரதிஷ்டை செய்து வைத்தார்

சிவஸாந்தியை சாவகச்சேரி பாரத்வாஜ கோத்ரம் லக்ஷ்மிகாந்தம் ஐயரின் இரண்டாவது புத்திரன் தியாகராஜன் திருமணம் செய்துள்ளார். இவர்கள் பிரிட்டிஷ் குடியுரிமை பெற்று லண்டனில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கு லக்ஷ்மிகாந்தன் என்ற மகனும் லட்சுமி என்ற மகளும் சந்ததியினர்.

*5 - 2 ஸ்ரீதரன் (பிறப்பு: 27.11.1946)*

இவர் கோப்பாய் நாவலர் பாடசாலை, கோப்பாய் கிறீஸ்தவ கல்லூரி, திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி என்பவற்றில் மேல்நிலைக் கல்வியை முடித்தபின் யாழ்ப்பாணம் ஸ்ரீலங்கா புத்தகசாலையில் தனது தொழில் வாழ்க் கையை ஆரம்பித்தார். பின் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் சொந்தமாக ஒரு வர்த்தக நிலையத்தை ஆரம்பித்து சில காலத்தின் பின் அதனை தம்பி சதானந்தனிடம் கையளித்துவிட்டு யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கத்தில் கடமையாற்றினார். அங்கு பணியாற்றிக் கொண்டிருக்கையில் இலங்கை வங்கியில் சேர வாய்ப்புக் கிடைத்தது. இலங்கை வங்கியில் இருபது ஆண்டு களுக்கு மேல் பணியாற்றி 2002ஆம் ஆண்டு ஓய்வு பெற்றுள்ளார்.

ஸ்ரீதரன் கொழும்புத்துறை தியாகராஜக் குருக்களின் பேர்த்தியும் கணேச சர்மாவின் சிரேஷ்ட புத்திரியுமான தேவி என்கின்ற சசிகலாதேவியை 1974ஆம் ஆண்டு திருமணம் செய்தார்.

இத்தம்பதியரின் சந்ததி: (1) கலாதரன் (2) ரிஷிகேசன் (3) காயத்ரி

காயத்ரி அரச திணைக்களத்தில் பணியாற்றுகிறார். இவரை கொழும்பு வத்தளையைச் சேர்ந்த கணக்காளர் சத்தியவாஹீஸ்வர சர்மாவின் ஏகபுத்திரன் சக்திதரன் திருமணம் செய்துள்ளார். சக்திதரன் தகவல் தொழினுட்ப உத்தியோகத்தராகக் கடமையாற்றுகிறார். இத்தம்பதியருக்கு அக்ஷரன் என்ற மகன் சந்ததி.

*5 - 3 சதானந்தன் (பிறப்பு: 20.03.1948)*

கோப்பாய் நாவலர் பாடசாலை, கோப்பாய் கிறீஸ்தவ கல்லூரி, திருநெல் வேலி பரமேஸ்வராக் கல்லூரி என்பவற்றில் மேல்நிலைக் கல்வியை முடித்தபின் யாழ்ப்பாணம் தொழினுட்பக் கல்லூரியில் வணிகத்துறையில் பயிற்சி பெற்று கணக்கியல் துறையில் தராதரம் பெற்றார். திருநெல்வேலியில் ஒரு சிறு வர்த்தக நிலையத்தை ஏற்படுத்தி அண்ணன் ஸ்ரீதரனுடன் அதனை நிர்வாகம் செய்து வரும்போது யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் பணியாற்ற வாய்ப்பு கிடைத்தது. யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நிதி நிர்வாகப் பிரிவு, மருத்துவ பீடம் என்பவற்றில் உத்தியோகத்தராகப் பணியாற்றினார். பின்னர் பதவி உயர்வு பெற்று வயம்ப பல்கலைக்கழகம், தென்கிழக்கு பல்கலைக் கழகம் ஆகியவற்றில் உதவிப் பதிவாளராக (Assistant Registrar) பணியாற்றி 2003ஆம் ஆண்டு ஓய்வு பெற்றுள்ளார்.

பல்கலைக் கழகத்தில் பணியாற்றிய காலத்தில் அதன் பணியாளர்களுக் கான தொழிற்சங்கத்தின் நிர்வாக சபையில் தொடர்ச்சியாக அங்கத்தவராக விளங்கினார். தொழிற் சட்டங்களில் தேர்ச்சி பெற்று தொழிலாளர்கள் பலரின் தொழில் சம்பந்தப்பட்ட சிக்கல்களுக்கு நிவாரணம் பெற உதவினார். தொழிற்சங்கம் சம்பந்தப்பட்ட சகல தகவல் பரிமாற்றங்களையும் கவனித்த துடன் பல்கலைக்கழக நிர்வாகத்தினருடனான சந்திப்புக்களில் ஒரு முக்கிய உறுப்பினராகச் செயற்பட்டார். பல விடயங்களில் சுமுகமான தீர்வுகளைப் பெற நிர்வாகத்தினருக்கு ஏற்ற ஆலோசனை வழங்கி பல்கலைக் கழகத்தின் சகல மட்டங்களிலும் மதிப்புப் பெற்றவராக இருந்தார்.

இவர் தொழினுட்ப மதியைக் கொண்டவராக சகலவித கடியாரங்கள், எலக்ட்ரானிக் கருவிகள் என்பவற்றை சீர் செய்யும் திறமை உள்ளவர்.

சோதிட சாஸ்திரம் கற்று ஜாதகம் கணிப்பதிலும் பலன் சொல்வதிலும் நல்ல தேர்ச்சி பெற்றவர். இதன் காரணமாக பலர் இவருடன் தொடர்பு கொண்டு பயன் பெற்று வருகின்றனர்.

பல்கலைக் கழக சேவையிலிருந்து ஓய்வு பெற்றபின் அக்கரைப்பற்று ஹற்றன் நெஷனல் வங்கியில் கடமையாற்றிய தனது மகனுடன் தங்கியிருக் கையில் அங்குள்ள சுவாமி விபுலாநந்த சிறுவர் இல்லத்தில் சேர்ந்து சேவை அடிப்படையில் பணியாற்றி வந்தார். இவரின் ஆங்கில அறிவு காரணமாக பலர் இவரின் சேவையை நாடினர். முக்கியமாக சிறுவர் இல்லத்தின் வெளி நாட்டு தொடர்புகளுக்கு இவரின் அநுபவமும் இவர் பெற்றிருந்த கணினி அறிவும் மிகவும் தேவையாக இருந்தது. தவிரவும், பின்தங்கிய கிராமங்களில் வாழும் மக்கள் இவரைத் தேடி வந்து உதவியும் ஆலோசனையும் பெற்று வந்தனர்.

விபுலாநந்த சிறுவர் இல்லத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த காலத்தில் 2004ஆம் ஆண்டு டிஸம்பர் 26ஆம் திகதி ஏற்பட்ட கடற்கோள் (சுனாமி) காரணமாக அக்கரைப்பற்றிலுள்ள அரச சார்பற்ற நிறுவனமான 'மகாசக்தி நிறுவனம்' சில புனர்நிர்மாண திட்டங்களை மேற்கொண்டது. அவற்றை நடைமுறைப்படுத்துவதற்காக அந்நிறுவனத்தினர் இவரை "திட்ட அலுவலர்" பதவியில் சேர்த்துக் கொண்டார்கள். சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வுக்காக உதவி செய்ய வந்த பல வெளிநாட்டு நலத்துறை நிறுவனங் களிடம் சமர்ப்பிக்கவென பல திட்டங்களை வரைந்து கொடுத்தார்.

தொடர்ந்து விபுலாநந்த இல்லத்து பணிகளைச் செய்து கொண்டிக்கை யில் இவரது மகனுக்கு வங்கியின் யாழ்ப்பாண கிளைக்கு மாற்றல் கிடைத்தது. எனினும் இவர் விபுலாநந்த இல்லத் தலைவர் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து அங்கேயே தங்கியிருந்து மக்கள் நலன் பேணும் சேவையில் ஈடுபட்டு வருகிறார்.

சதானந்தன் கொக்குவில் இரத்தினசபாபதி ஐயரின் மகள் பேபி என்ற

பத்மலோஜனியை 1976ஆம் ஆண்டு திருமணம் செய்தார்.

இத்தம்பதியரின் சந்ததி: (1) மணிவண்ணன் (2) மதிவதனன் (3) குமாரதாஸ்

*6 - 1 ஸ்ரீதரன் கலாதரன்*

யாழ்ப்பாண பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ சிறப்புப் பட்டதாரியான இவர் இலங்கை காப்புறுதி நிறுவனத்தில் உத்தியோகத்தராக சுமார் ஐந்து ஆண்டுகள் பணியாற்றிய பின் தற்போது கூட்டுறவு திணைக்களத்தில் உத்தியோகத்தராக வேலை பார்த்து வருகிறார்.

கலாதரன், மயிலணியைச் சேர்ந்தவரும் தற்போது கொழும்பு வத்தளை ஹேகித்த சிவசுப்ரமணிய ஸ்வாமி ஆலய குருவுமான ஸ்ரீ தியாகராஜக் குருக்கள் - வதனா தம்பதியின் மகள் பிரவீணாவை திருமணம் செய்துள்ளார். இவர்களின் மகள் திவ்யா.

*6 - 2 உமாகாந்தன் வித்யாசரணன்*

சென்னையில் கம்ப்யூட்டர் துறையில் பட்டம் பெற்று VICS Chennai என்ற கணினி பயிற்சி மையத்தையும், வரைகலை துறையில் சர்வதேச தரச்சான்று பெற்று வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வெப்சைட் வடிவமைத்துக் கொடுக்கும் Vidhya Graphics (www.vicschennai.com) என்ற நிறுவனத்தை யும் சொந்தமாக நிறுவியுள்ளார்.

வித்யாசரணன், தஞ்சாவூர் மாவட்டம் வரகூர் ஸ்ரீ வி.வி. ஸ்ரீநிவாஸன் - மீனாக்ஷி தம்பதியின் கனிஷ்ட புத்திரி ஸாந்தியை திருமணம் செய்துள்ளார். முதுநிலை கணக்கியல் பட்டதாரியான (M.Com) ஸாந்தி, சென்னையிலுள்ள Flextronics என்ற வெளிநாட்டு முகவர் நிறுவனத்தில் பணியாற்றுகிறார்.

*6 - 3 சதானந்தன் மணிவண்ணன்*

இலங்கை ஹற்றன் நெஷனல் வங்கியில் உத்தியோகத்தராக கடமை யாற்றுகிறார்.

*6 - 4 சதானந்தன் மதிவதனன்*

இலங்கை செலின்கோ கூட்டு நிறுவனத்தின் "செலான் வங்கி"யில் கடமை யாற்றுகிறார்.

*6 - 5 ஸ்ரீதரன் ரிஷிகேசன்*

ஏஷியன் பெயின்ட்ஸ் நிறுவனத்தில் விற்பனைப் பிரதிநிதியாகப் பணி யாற்றுகிறார்.

*6 - 6 சதானந்தன் குமாரதாஸ்*

கணினித்துறையில் தராதரம் பெற்று 'Micro PC Systems Ltd.'ல் கணினி தொழினுட்பவியலாளராக கடமையாற்றுகிறார்.

# அநுபந்தம்
# பெண்வழி உறவினர்கள்

*ஐயாசாமி ஐயரின் சகோதரி தங்கம்மாள்*

இவரை காரைநகர் ஸ்ரீவத்ஸ கோத்ரம் மார்க்கண்டையர் திருமணம் செய்தார். இவர்களின் மகன் கணபதி ஐயர். தமிழ், சம்ஸ்கிருதம் இரு மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்ற கணபதி ஐயர் 'ஆனைக்குட்டி ஐயர்' என மக்களால் செல்லமாக அழைக்கப்பட்டார்.

கணபதி ஐயர் சரஸ்வதி அம்மாளை (1 - 3) திருமணம் செய்தார். இத் தம்பதியின் சந்ததி: சதாசிவ ஐயர், சின்னையர், பரமசுவாமி ஐயர், பொன்னுத்துரை ஐயர், திருவேங்கடம்மாள், பிள்ளையம்மாள்.

இவர்களுள் சதாசிவ ஐயர் இராஜராஜேஸ்வரி அம்மாளை (2 - 1) திருமணம் செய்தார். இத்தம்பதியின் ஏகபுத்திரி லலிதாம்பா. (மேலதிக விபரம் கீழே 2 - 1 இராஜராஜேஸ்வரி தலைப்பின் கீழ் உள்ளது)

*1 - 3 சரஸ்வதி அம்மா (சரசு)*

மேலே சொன்னபடி காரைநகர் கணபதி ஐயர் இவரை திருமணம் செய்தார்.

*1 - 5 தெய்வயானை அம்மா*

பாரத்வாஜ கோத்ரம் சுப்பையர் இவரைத் திருமணம் செய்தார்.

இத்தம்பதியின் சந்ததி:
1. நாகம்மா, 2. பொன்னம்மா, 3. கார்த்திகேய ஐயர், 4. விசாலாட்சி அம்மா

1. நாகம்மாவை கந்ததாஸ ஐயர் (2 - 3) திருமணம் செய்தார். ஏகபுத்திரன் சண்முகநாதசர்மா

2. பொன்னம்மாவை மயிலணி கௌண்டின்ய கோத்ரம் சீனிவாச ஐயரின் மகன் சண்முக ஐயர் (கார்த்திகேய ஐயர் என்றும் பெயருண்டு) திருமணம் செய்தார். இத்தம்பதியின் சந்ததி: வைத்தீஸ்வர ஐயர், சீனிவாச சர்மா, ஜெகதீஸ்வரன், ஜெகதீஸ்வரி.

3. கார்த்திகேய ஐயர் கோப்பாய் சைவத் தமிழ் கலவன் பாடசாலை என்ற நாவலர் பள்ளிக்கூடத்தில் தலைமை ஆசிரியராகப் பணியாற்றினார். இவரை 'ஐயா உபாத்தியார்' என்று மக்கள் அழைத்தனர். இவர் தலைமை ஆசிரியராக இருந்ததுடன் நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோயில் ஆதீனகர்த்தாவாகவும் அதன் பிரதம குருவாகவும் விளங்கினார்.

மயிலணியைச் சேர்ந்த குப்பம்மாளைத் திருமணம் செய்தார்.

இத்தம்பதியின் சந்ததி:
சாம்பசதாசிவக் குருக்கள், குகதாச சர்மா, பராபரை (பராசக்தி).

4. விசாலாட்சி அம்மாளை உடுவில் அம்மன்கோயில் ஸ்தானீக குரு கௌண்டின்ய கோத்ரம் சிவகடாக்ஷ குருக்கள் திருமணம் செய்தார். இத் தம்பதியின் சந்ததி: வாஹீஸ்வரி, ஞானப்பூங்கோதை, முத்துச்சாமிக் குருக்கள், பாலசுப்பிரமணியக் குருக்கள்.

*1 - 2 செல்லம்மாள் (லக்ஷ்மி)*

இவரை அளவெட்டி பாரத்வாஜ கோத்ரம் தியாகராஜ ஐயர் திருமணம் செய்தார். இத்தம்பதியின் சந்ததி:

1. சதாசிவ ஐயர் 2. காமாக்ஷி 3. விசாலாக்ஷி

விசாலாக்ஷி பற்றிய விபரம் தெரியவில்லை

காமாக்ஷியை காரைநகர் ஸ்ரீவத்ஸ கோத்ரம் வெங்கடாசலம் ஐயர் (வளப்பர்) திருமணம் செய்தார். இவர்களின் சந்ததி: சண்முக ஐயர். அவரின் சந்ததி: பஞ்சாட்சர ஐயர், சுந்தரேச ஐயர், பிள்ளையர், பரமேஸ்வர ஐயர்.

பஞ்சாட்சர ஐயரின் சந்ததி: இந்திராட்சி அம்மா, சுவாமிநாத சர்மா (பிரின்சிப்பல்), வித்தியானந்த குரு.

இந்திராட்சி அம்மாளை ஜமதக்னி கோத்ரம் சின்னஸ்வாமி சர்மா (ஐயாசாமி ஐயரின் சகோதரன் காப்புக்கட்டி சின்னையரின் கொள்ளுப்பேரன்) திருமணம் செய்தார். இத்தம்பதியின் சிரேஷ்ட புத்திரி காயத்ரிதேவியின் இரண்டாவது புத்திரன் தியாகராஜன், உமாகாந்தனின் (5 - 1) புத்திரி சிவஸாந்தியை திருமணம் செய்துள்ளார்.

பரமேஸ்வர ஐயரின் மகளான ஆனந்த*லக்ஷ்மி*யின் மகன் கணக்காளர் சத்தியவாஹீஸ்வர சர்மாவின் மகன் சக்திதரன் ஸ்ரீதரனின் மகள் காயத்ரியை திருமணம் செய்துள்ளார்.

*1 - 2 - 1 சதாசிவ ஐயர்*

இவர் சம்ஸ்கிருதம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பாண்டித்யம் பெற்றிருந்தார். அந்நாளில் பள்ளிக்கூடங்களை பரிசோதிக்கும் "ஸ்கூல் இன்ஸ்பெக்டர்" என்ற பதவியை வகித்ததால் "இன்ஸ்பெக்டர் சதாசிவ ஐயர்" என அறியப்பட்டார். அவ்வாறு அறியப்பட்டாலும் அவர் அப்பதவிக்கு மேலான உயர் பதவியான "வடமாநில வித்தியாதரிசி" என்ற பதவியை வகித்தார். அக்காலத்தில் வடமாநிலம் என்பது தற்போதைய வடக்கு கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கியிருந்தது. தனது கடமை காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்துக்கு (அக்காலத்தில் மட்டக்களப்பு மாவட்டம் அம்பாறையை உள்ளடக்கியதாக பொத்துவில் வரை விரிந்து பரந்திருந்தது.)

செல்லும்போது அங்கு மக்களிடையே வாய்மொழியாக வழங்கிவந்த நாட்டார் பாடல்களை சேகரித்து, தொகுத்து, அச்சிட்டு வெளியிட்டார். இவரது தமிழ் நூல்கள் பல்கலைக் கழகங்களில் தமிழ் பயிலும் மாணவர்களுக்கு உசாத்துணை பாடநூல்களாக விளங்குகின்றன.

யாழ்ப்பாணத்தில் தமிழ், சம்ஸ்கிருதம் ஆகிய மொழிகளைக் கற்பிக்கும் நோக்குடன் "ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கம்" என்ற ஸ்தாபனத்தை நிறுவி அதன் மூலம் அரச அங்கீகாரம் பெற்ற பண்டிதர், பாலபண்டிதர் பரீட்சைகள் நடத்தி பட்டமளிக்க வழி செய்தார். இச்சங்கம் தனது பணிகளைத் தொடர்ந்து செய்து வருகிறது.

வடமொழியையும் தமிழையும் கற்பிக்கவென சுன்னாகத்திலே "பிராசீன பாடசாலை"யை நிறுவினார். தனது சொந்தப் பணத்தில் சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோயில் முன்பாக பாடசாலைக்கென ஒரு கட்டிடம் கட்டி தருமசாசனம் எழுதிவைத்தார்.

அவரது பொதுநலப் பணிகளைக் கௌரவித்து அக்கால அரசாங்கத்தால் "முகாந்திரம்" என்ற கௌரவப்பட்டம் அவருக்கு வழங்கப்பட்டது.

*2 - 2 புவனேஸ்வரி*

இவரை கௌண்டின்ய கோத்ரம் சோமசுந்தர ஐயர் (சாமி ஐயர்) திருமணம் செய்தார். இத்தம்பதியின் ஏக புத்திரன் இரத்தினசபாபதி ஐயர்.

இரத்தினசபாபதி ஐயர் கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் கோயில் நீலகண்டக் குருக்களின் மகளான இரத்தினம்மா என்பவரைத் திருமணம் செய்தார். இத்தம்பதியின் சந்ததி: புவனேஸ்வரி, மஹேஸ்வர சர்மா, பிரணதார்த்திஹர குருக்கள்.

புவனேஸ்வரியை கந்தரோடை பாரத்வாஜ கோத்ரம் சிவசுப்பிரமணிய குருவின் சிரேஷ்ட புத்திரன் கனகசபாபதி ஐயர் திருமணம் செய்தார்.

மஹேஸ்வர சர்மா மயிலணி சிவகடாக்ஷ குருக்களின் பெண் விசாலாட்சி அம்மாளைத் திருமணம் செய்தார்.

*பிரணதார்த்திஹரக் குருக்கள் (ஹரன் குருக்கள்)*

வீரபத்ர சுவாமி கோயில் பிரதம குருவான இவர் மேலே அநுபந்தம் 1 - 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள இந்திராட்சி அம்மாளின் மகள் சுகந்தி குந்தளாம்பிகையை திருமணம் செய்துள்ளார்.

*2 - 1 இராஜராஜேஸ்வரி*

இவரை காரைநகர் ஸ்ரீவத்ஸ கோத்ரம் கணபதி ஐயரின் (ஆனைக்குட்டி ஐயர்) மகன் சதாசிவ ஐயர் திருமணம் செய்தார். இந்த சதாசிவ ஐயரும் தனது ஒன்றுவிட்ட சகோதரனான "இன்ஸ்பெக்டர்" சதாசிவ ஐயரைப் போல

கல்வியில் சிறந்தவர். ஆனால் இவர் ஆங்கிலம் கற்கவில்லை. அதனால் எந்த உத்தியோகத்துக்கும் செல்லவில்லை. திண்ணைப் பள்ளிக்கூட முறையில் பல மாணாக்கர்களை உருவாக்கினார். இவரது மாணாக்கர்களிலே முக்கிய மானவர் பிற்காலத்தில் புகழ் பெற்ற வித்துவான் கணேசய்யர் ஆவார்.

இத்தம்பதியின் ஏகபுத்திரி லலிதாம்பா. லலிதாம்பாவை அத்தியடி ஆத்ரேய கோத்ரம் துரைசாமி ஐயர் திருமணம் செய்தார்.

*துரைசாமி ஐயர்*

இவர் அக்காலத்திலேயே (1920களில்) ஒரு பி.ஏ. (டி.யு.) பட்டதாரி. தமிழ், சம்ஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்று ஆசிரியராகக் கடமையாற்றினார். யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் சுவாமி விபுலாநந்தர் பிரின்ஸிபலாக இருந்த காலத்தில் இவர் அங்கு ஓர் ஆசிரியராகக் கடமையாற்றியுள்ளார். பின்னர் இந்தியா இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள ஜோட்பூர் பல்கலைக் கழகத்தில் ஆசிரியராகக் கடமையாற்றினார். உடல்நலக் குறைவால் இளம் வயதிலேயே காலமாகி விட்டார்.

இவர்களின் சந்ததி: சாரதாம்பா, சாந்தாதேவி (சண்முகநாதக் குருக்களின் மனைவி), குருஸ்வாமி ஐயர்.

சாரதாம்பாவை அல்வாய் காசிப கோத்ரம் பாலசுப்பிரமணிய சர்மா திருமணம் செய்தார். பாலசுப்பிரமணிய சர்மா (S.B. Sarma) மட்டக்களப்பு நகரில் சொந்தமாக ஓர் ஆலை (மில்) வைத்து வர்த்தகம் செய்ததுடன் அரசாங்க ஒப்பந்தக்காரராக இருந்து பல அரச கட்டடங்களைக் கட்டிக் கொடுத்துள்ளார். இவர் 1978-ல் காலமானார்.

இத்தம்பதியின் சந்ததி: ஜெகதீசன், சியாமளா

*குருஸ்வாமி ஐயர்*

சண்முகநாதக் குருக்களின் மைத்துனரும் அவரது பால்ய சிநேகிதனுமான இவர், இணுவில் சைவத் தமிழ் வித்தியாசாலையில் இரண்டு ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றினார். அதன் பின் தபால் திணைக்களத்தில் உத்தி யோகத்தராகச் சேர்ந்து 1949ஆம் ஆண்டு தொடக்கம் கொழும்பில் வாழ்ந்து வந்தார். தபால் திணைக்களத்தில் பல பதவி உயர்வுகளைப் பெற்று கொழும்பு, மட்டக்களப்பு, பண்டாரவளை, கம்பஹா, கண்டி எனப் பல நகரங்களில் பணியாற்றினார். சிரேஷ்ட நிர்வாகச் செயலர் என்ற உயர் பதவி பெற்று 1988ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

தமிழ், ஆங்கிலம் இரு மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றுள்ளதோடு சம்ஸ்கிருத மொழி அறிவும் பெற்றவர். நல்ல எழுத்தாளர். இவரது ஆக்கங்கள் தமிழ் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பல பத்திரிகைகள், சஞ்சிகைகள்

என்பவற்றில் பிரசுரமாகியுள்ளதோடு வானொலியிலும் ஒலிபரப்பாகியுள்ளன.

தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்பு செய்வதில் வல்லவர். சில சர்வதேச நிறுவனங்களின் ஆங்கில பிரசுரங்களை தமிழில் மொழிபெயர்த்துக் கொடுத்துள்ளார். இவர் செய்த மொழிபெயர்ப்பு பணிகளில் தலையாயது பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் (1008) நாளாந்த நற்சிந்தனைகளை ஆஞ்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழி பெயர்த்த பணியாகும். இந்த நற்சிந்தனைகள் மட்டக்களப்பு 'இலங்கை ஸ்ரீ சத்யசாயி நிறுவனங்களின் இணைப்புக்குழு'வால் புத்தகமாக வெளியிடப்பட்டது.

இவைதவிர, அரச நிறுவனங்களில் பணி செய்வோர் தமது கடமையின் போது ஏற்படும் சிக்கல்களுக்கு தீர்வு காண இவரின் ஆலோசனை பெற வருவதுண்டு. தக்க ஆலோசனை கூறி பலருக்கு அவர்களின் சிக்கலிலிருந்து தீர்வு பெற உதவியுள்ளார். தற்போது மட்டக்களப்பில் வாழ்ந்து வருகிறார்.

குருஸ்வாமி ஐயர் நீர்வேலி கந்தசுவாமி கோயில் சுவாமிநாதக் குருக்களின் மகளும் இராஜேந்திரக் குருக்களின் சகோதரியுமான நீலாயதாக்ஷி அம்மாளை (ஜெகதா) திருமணம் செய்தார்.

இவர்களின் சந்ததி: ரோஹினி, மைதிலி, கந்ததாஸ், கிருஷ்ணமூர்த்தி.

**Epilogue:** எமது பிற்கால சந்ததி தங்கள் வரலாற்றையும் எமது உறவினர்களையும் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற நன்நோக்கத்துடன் எமக்குத் தெரிந்த வரையில் கூடியவரை விசாரித்து மேற்படி அநுபந்தத்திலுள்ள தகவல்களைத் தந்துள்ளோம். இதில் யாராவது குறிப்பிடப்படாமல் விடுபட்டி ருக்கலாம். அல்லது சிறு தவறுகள் இருக்கலாம். அவற்றை எமக்கு அறியத் தந்தால் நன்றி.

வெளியிட்டவர்கள்:

சண்முகநாத சர்மாவின் பிள்ளைகள் -
உமாகாந்தன், ஸ்ரீதரன், சதானந்தன்.

Data compiled by: S.S. Umakanthan, updated 03.04.2006

உ

திருச்சிற்றம்பலம்



# வைநாயக த்ரிசதி

## (கணபதி த்ரிசதி)

இந்த த்ரிசதி விநாயக ரகசியம் ஞானசாரம் ஒன்றாம் பாகம், பதின்மூன்றாவது அத்தியாயத்தில் நாரதாதி முனிவர்களுக்கு சூரிய பகவான் உபதேசித்தது.

கணேஸ்வரோ கணக்ரீடோ கணநாதோ கணாதிப:|
கஜாநநோ கணபதிர் நித்யா நித்யே நிராமய:||

நிர்மலோ நிஷ்கலோ நித்யோ நாதமத்யே ப்ரதிஷ்டித:|
நிதிர் நிதிப்ரியபதிர் நாதாதீதோ நிதிப்ரத:||

நதீநதபுஜோ நாதஜநகோ விக்ந நாயக:|
விநாயகோ விரூபாக்ஷோ வரதோ விஷ்வபாலக:||

விக்நக்ருத்விக்ந சரணோ கஜதந்தோ கஜத்வநி:|
கணராஜோ கணச்ரீதோ கணபூஜ்யோ கணேஷ்டத:||

நாகாநநோ நிம்ந நாபிர் நித்யாநந்தோ நிரங்குச:|
நளிநீகாமுகோ நித்யம் நித்யா நித்யா வதம்ஸித:||

பூர்ணாநந்த: பரம்தாம பரமாத்மா பராத்பர:|
பரம்பதம் பசுபதிஸ் தத்வம் பதநிரூபித:||

தத்வாநாம் பரமம் தத்வம் தாரகஸ் தாரகாந்தக:|
தாரகாந்தர ஸம்ஸ்தாநஸ் தாரகாந்தக பூர்வஜ:||

ஹிரண்மய புராந்தஸ்தோ ஹ்ருதயாலாந நிச்சல:|
ஹ்ருத்பத்ம கர்ணிகாசாய் யர்கசேலீஸரோவர:||

ஹேரம்போ ஹவநோ ஹவ்யோ விதாதா விச்வதோமுக:|
விகர்தா விச்வதச்சக்ஷுர் வந்த்யா வேதாந்தகோசர:||

மதோத்கடோ மயூரேசோ மோஹிநீசோ மஹாபல:|
மஹாகணபதிர் மேகநாதோ ஹ்ருத் பத்மஸம்ஸ்தித:||

ஹம்ஸோ ஹஸ்திபிசாசீஸோ ஹ்ருல்லேகா மந்த்ர மத்யக:|
ஹர்ஷோ ஹவ்யகவ்யபுக் ச கபர்தீ கலபாநந:||

கர்மஸாக்ஷீ கர்மகர்தா கல்ப: கர்மாத்ரபூஜித:|
வக்ரதுண்டோ விக்நராஜோ வித்யாதோ விஜயஸ் ஸ்திர:||

விச்வகர்தா விச்வமுகோ காமதாதா கடங்கட:|
கல்பக: குமாரகுரு: கிரீடிகுலபாலந:||

வைமுக்யஹத தைத்யஸ்ரீ வராஹரதநோ வசீ|
வாகீச்வரீபதிர் வாசா ஸித்தோ வாயு ஸுகீலக:||

நந்திப்ரியோ நகஸுதாநந்தநோ நிஜஸம்ஸ்தித:|
நஷ்டத்ரவ்யப்ரதோ நாதோ நாராயண ஸுபூஜித:||

உச்சிஷ்டகண உச்சிஷ்ட: உச்சிஷ்டகணநாயக:|
உபேந்திர உடுப்ருந்மாலிருதார ஸ்த்ரீதசாக்ரணீ:||

பத்ம பரஸந்ந நயந: ப்ரணதாஜ்ஞாநமோசந:|
ப்ரத்யூஹாஞாந விஜ்ஞாந: ப்ரத்யூஹ ஹிம ஹவ்யபுக்||

ப்ரத்யூஹாம்போதிகாலாக்நி: ப்ரத்யூஹ கரலாம்ருத:|
மிருத்யுஞ்ஜயோ முக்திதாதா மஹாநாதோ மதோத்கட:||

மதநாவத்யாச்ரி தாங்க்ரிர்முத்கராயுத தாரக:|
சர்கலச் சம்புதநய: சக்திஜஸ் சம்புஹாஸ்ய பூ:||

சிவாஸுகாவஹஸ் சம்புதேஜோபூஸ் சம்பு கோபஹா|
வாணீஜிஹ்வோ வ்யோமநாபி: வாக்மீ வாஸவநாஸிகா||

வைநாயக ஸஹசரோ வித்ருதாலி ஸமூஹக:|
ஸ்தவஸ் ஸ்துதிபரஸ் ஸ்தவ்யஸ் ஸ்துதிதுஷ்டஸ் ஸ்துதிப்ரிய:||

மஹாலக்ஷ்மீ ப்ரியதமோ மாதுலிங்கதரோ மஹாந்|
மதநாவத்யாச்ரிதாங்க்ரிர் மஹாபுத்திர் மநோரம:||

மோஹிநீமோஹநோ ஜ்யேஷ்டோ ஜ்யேஷ்டராஜோ ஜகந்மய:|
ஜ்யேஷ்டபூஜிதோ ஜ்யேஷ்டேசோ ஜ்யேஷ்டராஜபதே ஸ்தித:||

ஷடக்ஷரஷ் ஷடாதாரஷ் ஷடசக்ரோபரி ஸம்ஸ்தித:|
ஷட்ருதுகுஸுமஸ்ரக்வர: ஷண்முகஷ் ஷண்முகாக்ரஜ:||

ரௌத்ரீ முத்ரித பாதாப்ஜோ ருஷ்டசித்த ப்ரஸாதந:|
ருத்ர ப்ரியோ ருத்ரபத்நி புத்ரோ ருத்ர சிரோதர:||

ரத்நமண்டப மத்யஸ்தோ ஜப பூஜந தோஷித:|
ஜப்யோ ஜபோ ஜபபரோ ஜிஹ்வா ஸிஹ்மாஸநப்ரபு:||

ஜிதேந்த்ர்யேஷ்ட ஸந்தாதா ப்ரஹ்மேஸோ ப்ரஹ்மணஸ்பதி:|
ப்ரஹ்மண்டகும்போ ப்ரஹ்மஸ்தோ ப்ரஹ்மசாரீ ப்ருஹஸ்பதி:||

ஹம்ஸோ வரோ ஹஸ்திபதி: ஹர்ஷதோ ஹவ்யகவ்யபுக்|
ஹாதி வித்யா ஷக்தி பதிர் ஹ்ருல்லேகா மந்த்ர மத்யக:||

நாமபாராயணப்ரீதோ நாமநிஷ்ட வரப்ரத:|
நா மதார்சந ஸந்துஷ்டோ நாகேந்த்ர தநயே நட:||

நிஜாநந்த ஸந்நிஷண்ணோ பாலகேலிகுதூஹலீ|
ப்ரஹ்மமூர்த்தா ப்ரஹ்மமுகோ ப்ரஹ்மாண்டா வலிமேகல:||

ப்ருஹதாரண்ய ஸம்வேத்யோ ப்ரஹ்மணாம் ப்ரஹ்மணஸ்பதி:|
மயூர நாயகோ மாயாபதிர் மூஷக வாஹந:||

மந்தார பூஜநப்ரீதோ மந்தாரகுஸுமப்ரிய:|
மந்தார மூல ஸஞ்ஜாதோ நாக பூஷண பூஷித:||

நாக ஹாரகடீ ஸூத்ரோ நாக யக்ஞோபவீத வாந்|
நாகராஜயோகதாதா நாக கன்யாஸு சாந்தித:||

நாராயணார்சிதபதோ ஸம்யோகாநந்த விக்ரஹ:|
ஸ்ருஷ்டிஸ்திதி லயக்ரீடஸ் ஸர்வபேஷஜ பேஷஜம்||

ஸிந்தூரித மஹாகும்பஸ் ஸாமகாநரதஸ்ஸுகீ|
தத்பதஸ் தத்பதாராத்யஸ் தத்பதார்த ஸ்வருபவாந்||

தத்வமஸ்யாக்ருதி தரஸ்தத்வ மஸ்யர்த விக்ரஹ:|
தத்வமஸ்யர்த ஸம்வேத்யோ ஹ்யாநந்த மூர்த்திதாரக:||

ஆதாரபீட ஆமோத ஆச்ரிதாபீஷ்ட தாயக:|
ஆதிமத்யாந்தரஹித: ஆகுராஜ மஹாரத:||

நிஜபக்தப்ரியதமோ நரநாராயணார்சித:|
நாராயண ஸ்ரீ பூர்வாங்கோ நடராஜஸுபூஜித:||

நிராலம்பயோக கம்யோ நிதித்யாஸ வரப்ரிய:|
ஸ்ரீம்கார ஷக்திஸம்யுக்த: ஸ்ரீபதிர் ஸ்ரீ நிகேதந:||

ஸ்ரீம்கார விக்ரஹஸ் ஸ்ரீதஸ் ஸ்ரீஸித்திபுத்தி விநாயக:|
விராட் விச்வோ வேதபதிர்வேதகர்தா விராட்ஸுத:||

விராட்பதிரூர்த்வலோககத ஊர்த்வ விநாயக:|
ஊர்ஜஸ்வாநூஷ்மல மத ஊஹா போஹ துராஸத:||

ஊநஷோடஷ வர்ஷாட்யஸ் திர்யக்கதி விநாசக:|
திதிமாத்ரஸு ஸம்பூஜ்யஸ் ஸ்திதிமாத்ர வரப்ரத:||

தத்வேஷ்டதஸ் தத்வபதிஸ் தத்வாதத்வ விவேகத:|
பீமரூபோ பூதபதிர் பூபதிர் புவநேச்வர:||

ப்ருசேஷபதத்த லக்ஷ்மீகோ பூதிதஸ் ஸோமபூஷண:|
ஸ்வதந்த்ரஸ் ஸத்யஸங்கல்பஸ் ஸத்ய ஸங்கல்பதாயக:||

ஸ்வஸம்வேத்யச்ச ஸர்வக்ஞோ தண்டப்ருத் தண்டநாயக:|
தக்ஷயக்ஞ ப்ரமதநோ தயாவாந் தைத்ய மோஹநு:||

திவ்ய வைபவஸந்தாதா அஸுரகுஞ்ஜரபேதந:|
ஸாக்ஷீ ஸமுத்ரமதநஸ் ஸதஸத் வ்யக்திதாயக:||

ஸ்வஸம்வேத்யா ஸம்ப்ரக்ஞாத யோககம்ய ஸ்வதக்ஷிண:|
தந்தப்ரபிந்நா ப்ரமாலோ தைவார்த ந்ருகஜாக்ருதி:||

தம்ஷ்ட்ராலக்நத் வீபகடோ தைத்ய வாரண தாரண:|
துராஸத கர்வஹரோ திவோதாஸ வரப்ரத:||

நேதிகர்தா நேதிபதோ நேதிப்ரஹ்ம வரப்ரத:|
நேதிஸ்வாநந்த பததோ நேதிசக்தி ஸமந்வித:||

நேத்ய ஸம்ப்ரக்ஞாதமய யோகலப்ய ஸுவிக்ரஹ:|
ஓம்கார சக்தி ஸஹித: ஓம்கார முகராஜித:||

ஓம்கார வாச்ய ஓம்கார ஓம்கார பூர்ண விக்ரஹ:|
ஓம்காரமய விஷ்வாத்மா கம்கார மந்த்ர விக்ரஹ:||

கம்காரஜப ஸந்துஷ்டோ கம்கார பூமருபவாந்|
கம்காரோ கம் மந்த்ரவேத்யோ கம்ப்ரஹ்ம ஸ்திதி தாயக:||

இதம் வைநாயகம் திரிசதி நாம்நாம் ய: படேத் பக்திமாந் நர:
தநதாந்யம் பசுந் புத்ராந் ரூபம் வித்யாம் பலம் ஹ்ரீயம்|
ஆரோக்யம் தர்மம் அர்த்தம் ச காமம் மோக்ஷமவாப்நுயாத்
அயுதாவர்தநாதஸ்ய பவேத் ஸித்திர் நிரந்தரம்||

திருச்சிற்றம்பலம்

**அர்ச்சனை யார் பெயரில் செய்வது?**

சிலர் கோவிலுக்குச் சென்று அர்ச்சனை செய்யும் போது, சுவாமி பெயருக்கே செய்யுங்கள் என்று அர்ச்சகரிடம் கூறுவார்கள். இது தவறான முறை. நமக்குள்ள பல சிக்கல்களிலிருந்து நிவர்த்தி பெறத்தான் அர்ச்சனை செய்கிறோம். அதை நம் பெயரில்தான் செய்ய வேண்டும். இதைவிடுத்து சுவாமி பெயரில் அர்ச்சனை செய்வது தவறான முறையாகும். முற்றும் துறந்த முழு ஞானிகளுக்கே சுவாமி பெயரில் அர்ச்சனை செய்வது உகந்ததாகும்.

உ

திருச்சிற்றம்பலம்

# சங்கரநாராயணர் மந்திரம்

அஸ்ய ஸ்ரீ சங்கர நாராயண மந்த்ரஸ்ய நாரதருஷி:|
அநுஷ்டுப் சந்த:| ஹரி ஹரோ தேவதா:|
ஹ்ரௌம் பீஜம்| ஹ்ரீம் சக்தி:|
மம ரக்ஷணார்த்தே ஜபே விநியோக:|

| | | |
|---|---|---|
| ஹ்ராம் | அங்குஷ்டாப்யாம் நம:\| | ஹ்ருதயாய நம:\| |
| ஹ்ரீம் | தர்ஜநீப்யாம் நம:\| | சிரஸே ஸ்வாஹா\| |
| ஹ்ரூம் | மத்யமாப்யாம் நம:\| | சிகாய வஷட்\| |
| ஹ்ரைம் | அநாமிகாப்யாம் நம:\| | கவசாய ஹூம்\| |
| ஹ்ரௌம் | கநிஷ்டிகாப்யாம் நம:\| | நேத்ர திரயாய வௌஷட்\| |
| ஹ்ர: | கரதலகர ப்ருஷ்டாப்யாம் நம:\| | அஸ்த்ராய பட்\| |

பூர்புவஸ்ஸுவரோம்| இதி திக் பந்த:|

சூலம் சக்ரம் பாஞ்சஜன்யம் கபாலம் தததம் கரை:|
ஸ்வஸ்வ பூஷார்த்த நீலார்த்த தேஹம் ஹரிஹரம் பஜே||

லம் இத்யாதி பஞ்ச பூஜாம்

ஓம் ஹ்ரௌம் ஹ்ரீம் சங்கரநாராயணாய நம: ஓம் ஹ்ரௌம் ஹ்ரீம்||
புந: ஹ்ருதயாதி ந்யாஸம் த்யாநம் பஞ்ச பூஜாம் ஜப ஸமர்ப்பணம்||

இதி சிவம்

**திருமணத் தடைகள் அகல**

வெள்ளிக்கிழமை ராகு காலத்தில் பைரவருக்கு சந்தன காப்பு செய்து புனுகுபூசி தாமரை மலர் மாலை அணிவித்து அவல் கேஸரி, பானகம், சர்க்கரை பொங்கல் போன்றவற்றை படைத்து அர்ச்சனை செய்துவர திருமணத் தடை அகன்று மனதிற்கு பிடித்த துணை அமையும்.

உ

ஸ்ரீ ஸ்கந்த குருவே நம:



ஸ்ரீ சாந்தானந்த ஸ்வாமிகள்

அருளிச் செய்த

# ஸ்ரீ ஸ்கந்தகுரு கவசம்

ராகம் : நாட்டை

கலியுகத் தெய்வமே கந்தனுக்கு மூத்தோனே
மூஷிக வாகனனே மூலப் பொருளோனே
ஸ்கந்தகுரு கவசத்தைக் கலிதோஷம் நீங்கிடவே
திருவடியின் திருவருளால் செப்புகிறேன் காத்தருள்வாய்!
ஷித்தி விநாயக ஜயமருள் போற்றுகிறேன்
சிற்பர கணபதே நற்கதியும் தந்தருள்வாய்
கணபதி தாளிணையைக் கருத்தினில் வைத்திட்டேன்
அச்சம் தீர்த்தென்னை ரக்ஷித்திடுவீரே!

ராகம் : நாட்டை

ஸ்கந்தா சரணம் ஸ்கந்தா சரணம்
சரவணபவ குஹா சரணம் சரணம்
குருகுஹா சரணம் குருபரா சரணம்
சரண மடைந்திட்டேன் ஸ்கந்தா சரணம்!
தனைத்தானறிந்து நான் தன்மயமாகிடவே
ஸ்கந்தகிரி குருநாதா தந்திடுவீர் ஞானமுமே
தத்தகிரி குருநாதா வந்திடுவீர் வந்திடுவீர்
அவதூத ஸத்குருவாய் ஆண்டவனே வந்திடுவீர்
அன்புருவாய் வந்தென்னை ஆட்கொண்ட குருபரனே
அறம் பொருளின்பம் வீடுமே தந்தருள்வாய்
தந்திடுவாய் வரமதனை ஸ்கந்தகுரு நாதா
சண்முகா சரணம் சரணம் ஸ்கந்த குரோ!
காத்திடுவாய் காத்திடுவாய் ஸ்கந்தகுரு நாதா
போற்றிடுவேன் போற்றிடுவேன் புவனகுரு நாதா
போற்றி போற்றி ஸ்கந்தா போற்றி
போற்றி போற்றி முருகா போற்றி
அறுமுகா போற்றி அருட்பதம் அருள்வாய்
தகப்பன் சாமியே என் இதயத்துள் தங்கிடுவாய்
ஸ்வாமி மலைதனில் சொன்னதனைச் சொல்லிடுவாய்.

ராகம் : ஸஹானா

சிவகுரு நாதா செப்பிடுவாய் ப்ரணவமதை
அகக்கண் திறக்க அருள்வாய் உபதேசம்
திக்கெல்லாம் வென்று திருச்செந்தில் அமர்ந்தோனே
ஆறுமுக ஸ்வாமி யுன்னை அருட்ஜோதியாய்க் காண
அகத்துள்ளே குமரா நீ அன்பு மயமாய் வருவாய்
அமரத் தன்மையினை அனுக்ரஹித் திடுவாயே!
வேலுடைக் குமரா நீ வித்தையும் தந்தருள்வாய்
வேல்கொண்டு வந்திடுவாய் காலனை விரட்டிடவே
தேவரைக் காத்த திருச்செந்தி லாண்டவனே!
திருமுருகன் பூண்டியிலே திவ்யஜோதியான கந்தா
பரஞ்ஜோதி யுங்காட்டி பரிபூர்ண மாக்கிடுவாய்
திருமலை முருகா நீ திடஞானமருள் புரிவாய்
செல்வமுத்துக் குமரா மும்மல மகற்றிடுவாய்!
அடிமுடி யறியவொணா அண்ணா மலையோனே!
அருணாசலக் குமரா அருணகிரிக் கருளியவா
திருப்பரங் கிரிகுஹனே தீர்த்திடுவாய் வினைமுழுதும்
திருத்தணி வேல்முருகா தீரனாய் ஆக்கிடுவாய்
எட்டுக்குடிக் குமரா ஏவல்பில்லி சூன்யத்தை
பகைவர் சூதுவாதுகளை வேல்கொண்டு விரட்டிடுவாய்
எல்லாப் பயன்களும் எனக்குக் கிடைத்திடவே
எங்கும் நிறைந்த கந்தா என்கண் முருகா நீ
என்னுள்ளறிவாய் நீ உள்ளொளியாய் வந்தருள்வாய்!
திருப்போரூர் மாமுருகா திருவடியே சரணமய்யா
அறிவொளியாய் வந்துநீ அகக்கண்ணைத் திறந்திடுவாய்.

ராகம் : கல்யாணி

திருச்செந்தூர் ஷண்முகனே ஜகத்குருவிற் கருளியவா
ஜகத்குரோ சிவகுமரா சித்தமல மகற்றிடுவாய்
செங்கோட்டு வேலவனே சிவானுபூதிதாரும்
சிக்கல் சிங்காரா ஜீவனைச் சிவனாக்கிடுவாய்
குன்றக் குடிகுமரா குருகுஹனாய் வந்திடப்பா
குமரகிரிப் பெருமானே மனத்தையும் மாய்த்திடுவீர்
பச்சைமலை முருகா இச்சையைக் களைந்திடப்பா
பவழமலை ஆண்டவனே! பாவங்களைப் போக்கிடப்பா
விராலிமலை ஷண்முகனே விரைவில்நீ வந்திடப்பா
வயலூர் குமாரகுரோ ஞானவரமெனக் கருள்வீரே

வெண்ணெய் மலைமுருகா மெய்வீட்டைத் தந்திடுவீர்
கதிர்காம வேலவனே மனமாயையை அகற்றிடுவாய்:
காந்தமலைக்குமரா கருத்துள் வந்திடுவீர்
மயிலத்து முருகா நீ மனத்தகத்துள் வந்திடுவீர்
கழுசமலை சித்தகுரோ கண்ணொளியாய் வந்திடுவீர்
குமரமலைக் குருநாதா கவலையெல்லாம் போக்கிடுவீர்
வள்ளிமலை வேல்முருகா வேல்கொண்டு வந்திடுவீர்
வடபழனி யாண்டவனே வல்வினைகள் போக்கிடுவீர்
ஏழுமலையாண்டவனே எத்திக்கும் காத்திடுவீர்
ஏழ்மை யகற்றி ஸ்கந்தா எமபயம் போக்கிடுவீர்
அசையாத நெஞ்சத்தில் அறிவாக நீ அருள்வாய்
அறுபடைக் குமரா மயிலேறி வந்திடுவாய்
பணிவதே பணியென்று பணித்தனை நீ எனக்கு
பணிந்தேன் ஸ்கந்தா உன்பாதம் பணிந்துவப்பேன்
அருட்பெருஞ்ஜோதியே அன்பெனக் கருள்வாயே

ராகம் : ஆனந்தபைரவி

படர்ந்த அன்பினை நீ பரப்பிரம்மம் என்றனையே
உலகெங்கு முள்ளது ஒரு பொருள் அன்பேதான்
உள்ளுயிராகி இருப்பதும் அன்பென்றாய்
அன்பே குமரன் அன்பே ஸ்கந்தன்
அன்பே ஓமெனும் அருள்மந்திரம் என்றாய்
அன்பை உள்ளத்திலே அசையாது அமர்த்திடுமோர்
சக்தியைத் தந்து தடுத்தாட் கொண்டிடவும்
வருவாய் அன்பனாய் வந்தருள் ஸ்கந்தகுரோ!
யாவர்க்கும் இனியன் நீ யாவர்க்கும் எளியன் நீ
யாவர்க்கும் வலியன் நீ யாவர்க்கும் மானோய் நீ
உனக்கொரு கோயிலை என் அகத்துள்ளே புனைவேனே!
சிவசக்திக் குமரா சரணம் சரணமையா
அபாயம் தவிர்த்துத் தடுத்தாட் கொண்டருள்வாய்
நிழல்வெயில் நீர்நெருப்பு மண்காற்று வானதிலும்
பகைமையை அகற்றி அபயமளித் திடுவீர்!
உணர்விலே ஒன்றி என்னை நிர்மல மாக்கிடுவாய்
யானென தற்றமெய்ஞ் ஞானம் அருள்வாய் நீ
முக்திக்கு வித்தான முருகா ஸ்கந்தா.

ராகம் : கேதார கௌளை

சதுர்மறை போற்றும் ஷண்முக நாதா
ஆகமம் ஏத்தும் அம்பிகைப் புதல்வா!

ஏழையைக் காக்கநீ வேலேந்தி வந்திடுவாய்
தாயாய்த் தந்தையாய் முருகா தக்கணம் நீ வருவாய்
சக்தியும் சிவனுமாய்ச் சடுதியில் நீ வருவாய்
பரம்பொருளான பாலனே ஸ்கந்தகுரோ!
ஆதிமூலமே அருவாய் உருவாய் நீ
அடியனை காத்திட அருவாய் வந்தருள்வாய்
உள்ளொளியாய் முருகா உடனே நீ வா வா வா
தேவாதி தேவா சிவகுரோ வா வா வா
வேலாயுதத்துடன் குமரா விரைவில் நீ வந்திடப்பா!
காண்பன யாவுமாய் கண்கண்ட தெய்வமாய்
வேதச்சுடரோய் மெய்கண்ட தெய்வமே
வித்தையாம் இவ்வுலகை வித்தையென் றறிந்திடச் செய்
அபயம் அபயம் ஸ்கந்தா அபயமென்றலறுகிறேன்
அமைதியை வேண்டி அறுமுகா வா வாவென்றேன்
உன்துணை வேண்டினேன் உமையவள் குமராகேள்
அச்சம் அகற்றிடுவாய் அமைதியை தந்திடுவாய்
வேண்டிய துன்னருளே அருள்வதுன் கடனேயாம்
உன் அருளாலே உன்தாள் வணங்கிட்டேன்
அஷ்டமா ஸித்திகளை அடியனுக் கருளிடப்பா!
அஜபை வழியிலே அசையாம லிருத்திவிடு
சித்தர்கள் போற்றிடும் ஞான ஸித்தியும் தந்துவிடு
சிவானந்தத் தேனில் திளைத்திடவே செய்துவிடு
அருள் ஒளி காட்சியை அகத்துள்ளே காட்டிவிடு
அறிவை அறிந்திடும் அவ்வருளை நீ தந்துவிடு
அனுக்கிரஹித் திடுவாய் ஆதிகுரு நாதாகேள்!
கந்த குருநாதா ஸ்கந்த குருநாதா!
தத்துவம் மறந்து தன்னையும் நான்மறந்து
நல்லதும் கெட்டதும் நானென்பதும் மறந்து
பாவ புண்ணியத்தோடு பரலோகம் மறந்திடச்செய்
அருள்வெளி விட்டிவனை அகலா திருத்திடுவாய்
அடிமையைக் காத்திடுவாய் ஆறுமுக ஸ்கந்தகுரோ
ஸித்தியிலே பெரியஞான ஸித்தி நீ அருள
சீக்கிரமே வருவாய் சிவானந்தம் தருவாய்
சிவானந்தம் தந்தருளி சிவசித்த ராக்கிடுவாய்
சிவனைப் போலென்னைச் செய்திடுவதுன் கடனே
சிவஸத் குருநாதா சிவஸத் குருநாதா

ராகம் : ஷண்முகப்ரியா

ஸ்கந்தகுரு நாதா கதறுகிறேன் கேட்டிடுவாய்
தாளினைப் பிடித்தேன் தந்திடு வரமெனக்கு
திருவருட் ஸக்தியை தந்தாட் கொண்டிடுவாய்
சத்துருப் பகைவர்களை ஷண்முகா ஒளித்திட்டுக்
கிழக்குத் திசையிலிருந்து க்ருபாகரா காப்பாற்றும்
தென்கிழக்குத் திசையிலிருந்து தீனபந்தோ காப்பாற்றும்
தென்திசையிலு மென்னைத் திருவருளால் காப்பாற்றும்
தென்மேற்கிலு மென்னைத் திரல்வேலால் காப்பாற்றும்
மேற்குத் திக்கிலென்னை மால்மருகா ரக்ஷிப்பாய்
வடமேற்கிலு மென்னை மயிலோனே ரக்ஷிப்பாய்
வடக்கிலென்னைக் காப்பாற்ற வந்திடுவீர் ஸத்குருவாய்
வடகிழக்கில் எனக்காக மயில்மீது வருவீரே!

ராகம் : பீம்பிளாஸ்

பத்துதிக்குத் தோறுமென்னைப் பறந்துவந்து ரக்ஷிப்பாய்
என்சிகையையும் சிரசினையும் சிவகுரோ ரக்ஷிப்பாய்
நெற்றியும் புருவமும் நினதருள் காக்கட்டும்
புருவங்களுக் கிடையே புருஷோத்தமன் காக்கட்டும்
கண்களிரண்டையும் ஸ்கந்தவேல் காக்கட்டும்
நாசிகளிரண்டையும் நல்லவேல் காக்கட்டும்
செவிகளிரண்டையும் சேவற்கொடி காக்கட்டும்
கன்னங்களிரண்டையும் காங்கேயன் காக்கட்டும்
உதட்டினையும் தான் உமாஸுதன் காக்கட்டும்
நாக்கை நம்முருகன் நயமுடன் காக்கட்டும்
பற்களை ஸ்கந்தன் பலம்கொண்டு காக்கட்டும்
கழுத்தை ஸ்கந்தன் கைகளால் காக்கட்டும்
தோள்களிரண்டையும் தூயவேல் காக்கட்டும்
கைகால் விரல்களைக் கார்த்திகேயன் காக்கட்டும்
மார்பையும் வயிற்றையும் வள்ளிமணாளன் காக்கட்டும்
மனத்தை முருகன்கை மாத்தடிதான் காக்கட்டும்
ஹ்ருதயத்தில் ஸ்கந்தன் இனிது நிலைத்திருக்கட்டும்
உதரத்தை யெல்லாம் உமை மைந்தன் காக்கட்டும்
நாபிகுஹ்யம் லிங்கம் நவயுடைக் குதத்தோடு
இடுப்பை முழங்காலை இணையான கால்களையும்
புறங்கால் விரல்களையும் பொருந்துமுகா் அனைத்தையுமே
உரோமத் துவாரமெல்லாம் உமைபாலா ரக்ஷிப்பாய்
தோல்ரத்தம் மஜ்ஜையையும் மாம்ஸமென்பு மேதஸையும்

ராகம் : மோஹனம்

ஆறுமுகவா காத்திடுவீர் அமரர்தலைவா காத்திடுவீர்!
என்அஹங்கார மும்மலமகற்றி அறிவொளியாய் இருந்தும்
முருகாவெனைக் காக்க வேல்கொண்டு வந்திடுவீர்
பாவத்தைப் பொசுக்கிப் பாரெலாம் சிறப்புறவே
ஓம் ஸௌம் சரவணபவ ஸ்ரீம் ஹ்ரீம் ஹ்லீம் என்றும்
ஹ்ரௌம்ஸௌம் நமகவென்று சேர்த்திடடா நாள்தோறும்
ஓம்இருந்து நமஹவரை ஒன்றாக சேர்த்திடடா
ஒன்றாக கூட்டியுமே உள்ளத்திலே இருத்தி
ஒருமனத்தோடு நீ உருவையும் ஏத்திடடா!
முருகனின் மூலமிது முழுமனத்தோ டேத்தித்தால்
மும்மல மகன்றுவிடும் முக்தியுந்தன் கையிலுண்டாம்
முக்தியை வேண்டியுமே எத்திக்கும் செல்ல வேண்டாம்
முருகன் இருப்பிடமே முக்தித்தலமா குமப்பா
ஹ்ருதயத்தில் முருகனை இருத்திவிடு இக்கணமே
இக்கணமே மூலமந்திரம் ஏத்திவிடு ஏத்திவிடு
மூலமதை ஏத்துவோருக்குக் காலபயம் இல்லையடா
காலனை நீ ஜெயிக்க ஸ்கந்தனை பற்றிடடா!
சொன்னபடி செய்தால் ஸுப்ரமண்ய குருநாதன்
தன்னொளிப் பெருஞ்சுடராய் உன்னுள்ளே தானிருப்பான்
ஜெகமாயையை ஜெயித்திடவே செப்பினேன் மூலமுமே
மூலத்தை நீ ஜெபித்தே முக்தனுமா கிடடா!
அக்ஷர லக்ஷமிதை அன்புடன் ஜெபித்துவிடில்
எண்ணியதெல்லாம் கிட்டும் எமபயம் அகன்றோடும்
மூவுலகும் பூஜிக்கும் முருகனருள் முன்னிற்கும்
பூவுலகில் இணையற்ற பூஜ்யனு மாவாய் நீ
கோடித் தரம் ஜெபித்து கோடிகாண வேண்டுமப்பா!
கோடி காணச் சொன்னதை நீ நாடிடுவாய் மனமே
ஜென்மம் கடைத்தேற ஜெபித்திடுவாய் கோடியுமே
வேதாந்த ரகசியமும் வெளியாகு முன்னுள்ளே
வேத சூக்ஷமத்தை விரைவாக பற்றிடலாம்
ஸுப்ரமண்ய குரு ஜோதியாயுள் தோன்றிடுவான்
அருட்பெரும் ஜோதியான ஆறுமுக சுவாமியுமே
அந்தர் முகமிருந்து ஆட்கொள்வான் ஸத்தியமாய்
ஸித்தியையும் முக்தியையும் ஸ்கந்தகுரு தந்திடுவான்

ராகம் : அடானா

நின்னையே நான் வேண்டி நித்தமும் ஏத்துகிறேன்
மெய்யறிவாக ஸ்கந்தா வந்திடுவாய் இவனுளே நீ
வந்திடுவாய் மருவிடுவாய் பகுத்தறிவாகவே நீ
பகுத்தறிவோ டிவனை பார்த்திடச் செய்திடப்பா!
பகுத்தறிவான கந்தன் பறங்குன்றில் இருக்கின்றாய்
பழனியில் நீயும் பழம்ஜோதியானாய் நீ
பிரம்மனுக் கருளியவா பிரணவ பொருளோனே
பிறவா வரமருளி பிரம்ம மயமாக்கிடுவாய்
திருச்செந்தூரில் நீ சக்திவேல் தாங்கிவிட்டாய்
பழமுதிர்ச்சோலையிலே பரஞ்சோதி மயமானாய்
ஸ்வாமிமலையிலே சிவஸ்வாமிக் கருளிய நீ
குன்றுகள் தோறும் குருவாய் அமர்ந்திட்டோய்
ஸ்கந்தகிரியை நீ சொந்தமாக்கிக் கொண்டனயே
ஸ்கந்தகுரு நாதா ஸ்கந்தாச்ரம ஜோதியே
பிறப்பையும் இறப்பையும் பெயர்த்துக் காத்திடுவாய்
பிறவாமை என்கின்ற பெருவரம் நீ தந்திடுவாய்
தத்துவக் குப்பையை மறந்திடச் செய்திடுவாய்
எந்த நினைப்பையும் எரித்துநீ காத்திடுவாய்
ஸ்கந்தா சரணம் ஸ்கந்தா சரணம்!
சரணமடைந்திட்டேன் சடுதியில் வாருமே
சரவணபவனே சரவணபவனே!
உன்னருளாலே உயிரோடிருக்கின்றேன்
உயிருக்கு உயிரான ஸ்கந்தா உன்னிலென்னை கரைத்திடப்பா

ராகம் : ஸிம்மேந்திர மத்யமம்

என்னிலுனைக் காண எனக்கு வரமருள்வாய்
சீக்கிரம் வந்து சிவசக்தியும் தந்தருள்வாய்
இடகலை பிங்கலை ஏதும் அறிந்திலேன் நான்
இந்த்ரிய மடக்கி இருந்து மருகிலேன் நான்
மனத்தை அடக்க வழியொன்று மறிந்திலேன் நான்
ஸ்கந்தா உன்திருவடியை பற்றினேன் சிக்கனவே!
சிக்கனெப் பற்றினேன் செப்பிடுவீர் உபதேசம்
காமக்கசடுகள் யாவையும் களைந்திடுவாய்
ஸித்தசுத்தியும் ஜெபமும் தந்திடுவாய்
நினைப்பெல்லாம் நின்னையே நினைத்திட செய்திடுவாய்
திருமுருகா உன்னை திடமுற நினைத்திடவே
திருவருள் தந்திடுவாய் திருவருள்தான் பொங்கிடவே

திருவருள் ஒன்றிலே நிலைபெற செய்திடுவாய்
நிலைபெற செய்திடுவாய் நித்யானந்தமதில்
நித்யானந்தமே நின்னுருவாகையினால்
அத்வை தானந்தத்தில் இமைப்பொழுது ஆழ்த்திடுவாய்
ஞானபண்டிதா! நான்மறைவித்தகா கேள்
ஸ்கந்தகுரு நாதா ஸ்கந்தகுரு நாதா கேள்
மெய்பொருள் காட்டி மேன்மை அடைந்திடச் செய்
வினைகள் யாவையுமே வேல் கொண்டு விரட்டிடுவாய்
தாரித் திரியங்களையுன் தடிகொண்டு விரட்டிடுவாய்
துக்கங்கள் அனைத்தையும் தொலைதூரம் போக்கிடுவாய்
பாவ உடலை பரிசுத்தமாக்கிடுவாய்
இன்ப துன்பத்தை இருவிழியால் விரட்டிடுவாய்
ஆசை பேய்களை அறவே நசுக்கிடுவாய்
அகந்தை பிசாசை அழித்து ஒழித்திடடா
மெய் யருளாம் உன்னருளில் முருகா இருத்திடுவாய்

ராகம் : தன்யாஸி

கண்கண்ட தெய்வமே கலியுக வரதனே!
ஆறுமுக மானகுரோ அறிந்திட்டேன் உன் மகிமை
இக்கணமே வருவாய் என்கந்த குருவே நீ
என்னைக் காத்திடவே எனக்கு நீ அருளிடவே
அரைக்கணத்தில் நீயும் ஆடிவருவா யப்பா
வந்தென்னை தடுத்து வலிய ஆட்கொள் வரதகுரோ
அன்பு தெய்வமே ஆறுமுகமானவனே
ஸுப்ரமண்யனே சோகம் அகற்றிடுவாய்
ஞான ஸ்கந்தரே ஞானம் அருள்வாய் நீ!
ஞான தண்டபாணியே! என்னை ஞான பண்டிதனாக்கிடுவாய்
அகந்தையெலாம் அழித்து அன்பினை ஊட்டிடுவாய்
அன்பு மயமாக்கி ஆட்கொள்வா யப்பா
அன்பை என் உள்ளத்தில் அசைவின்றி நிறுத்திவிடு
அன்பையே கண்ணாக ஆக்கி காத்திடுவாய்
உள்ளும் புறமும் உன்னருளாம் அன்பையே
உறுதியாக நானும் பற்றிட உவந்திடுவாய்
எல்லையில்லாத அன்பை இறைவெளி என்றாய் நீ
அங்கிங்கெனாதபடி எங்கும் அன்பென்றாய்
அன்பே சிவமும் அன்பே சக்தியும்
அன்பே ஹரியும் அன்பே ப்ரம்மனும்
அன்பே தேவரும் அன்பே மனிதரும்

அன்பே நீயும் அன்பே நானும்
அன்பே சத்தியம் அன்பே நித்தியம்
அன்பே சாந்தம் அன்பே ஆனந்தம்
அன்பே மௌனம் அன்பே மோட்சம்
அன்பே ப்ரம்மமும் அன்பே அனைத்துமென்றாய்
அன்பிலாத இடம் அங்குமிங்கும் இல்லையென்றாய்
எங்கும் நிறைந்த அன்பே என்குரு நாதனப்பா
அன்பில் உறையும் அருட்குரு நாதரேதான்!!
ஸ்கந்தாஸ்ரமத்தில் ஸ்கந்தகுருவானான் காண்
மூவரும் தேவரும் முனிவரும் போற்றிடவே
ஸ்கந்தாஸ்ரமம் தன்னில் ஸ்கந்த ஜோதியுமாய்
ஆத்ம ஜோதியுமாய் அமர்ந்திட்ட ஸ்கந்தகுரு
இருளை அகற்றவே எழுந்திட்ட எங்கள் குரு
எல்லையில்லாத உன் இறைவெளியை காட்டிடுவாய்!
முக்தியை தந்திடுவாய் மூவரும் போற்றிடவே
நம்பினேன் உன்னையே நம்பினேன் ஸ்கந்தகுரோ
உன்னையன்றி இவ்வுலகில் ஒன்றுமில்லை என்றுணர்ந்தேன்

ராகம் : காம்போஜி

நன்கறிந்து கொண்டேன் நானும் உனதருளால்
விட்டிட மாட்டேன் ஸ்கந்தா வீடதருள்வீரே
நடுநெற்றித் தானத்து நானுனைத் தியானிப்பேன்
ப்ரம்ம மந்திரத்தைப் போதித்து வந்திடுவாய்
சுழுமுனை மார்க்கமாய் ஜோதியைக் காட்டிடுவாய்
சிவயோகி யாக எனைச் செய்திடும் குருநாதா
ஆசை அறுத்து அரனடியைக் காட்டிவிடும்
மெய்யடியராக்கி மெய்வீட்டில் இருத்திவிடும்
கொங்கு நாட்டிலே கோயில் கொண்ட ஸ்கந்தகுரோ
கொல்லிமலை மேலே குமரகுருவானவனே
கஞ்சமலை சித்தர் போற்றும் ஸ்கந்தகிரி குருநாதா
கருவூரார் போற்றும் காங்கேயா ஸ்கந்தகுரோ
மருதமலை சித்தன் மகிழ்ந்துபணி பரமகுரோ
சென்னி மலைக்குமரா சித்தர்க் கருள்வோனே
சிவவாக்கிய சித்தருளைச் சிவன்மலையில் போற்றுவீரே!
பழனியில் போகருமே பாரோர்வாழப் ப்ரதிஷ்ட்டித்தான்
புலிப்பாணி ஸித்தர்களால் புடை சூழ்ந்த குமரகுரோ
கொங்கில் மலிந்திட்ட ஸ்கந்த குருநாதா
கள்ளம் கபடமற்ற வெள்ளையுள்ளம் அருள்வீரே!

கற்றவர்களோடென்னைக் களிப்புறச் செய்திடுமே
உலகெங்கும் நிறைந்திருந்தும் ஸ்கந்தகுரு உள்ள இடம்
ஸ்கந்தகிரி என்பதைநான் கண்டுகொண்டேன்! கண்டுகொண்டேன்!

ராகம் : ஹம்ஸானந்தி

நால்வர் அருணகிரி நவமிரண்டு சித்தர்களும்
பக்தர்களும் போற்றும் பழனிமலை முருகாகேள்
கொங்குதேசத்திலே குன்றுதோறும் குடிகொண்டோய்!
சீலம் நிறைந்த சேலம் மாநகரத்தில்
கன்னிமார் ஓடையின்மேல் ஸ்கந்தகிரி அதனில்
ஸ்கந்தா ச்ரமத்தினிலே ஞானஸ்கந்த ஸத்குருவாய்
அமர்ந்திருக்கும் ஜோதியே ஆதிமூல மானகுரோ
அயர்ச்சியை நீக்கிடுவாய் என் தளர்ச்சியை அகற்றிடுவாய்
ஸுக வனேசன் மகனே ஸுப்ரமண்ய ஜோதியே
பேரின்ப மகிழ்ச்சியையும் பெருகிட செய்திடப்பா
பரமானந்தமதில் எனைமறக்கப் பாலிப்பாய்
மால் மருகா வள்ளிமணவாளா ஸ்கந்தகுரோ!
சிவகுமரா உன்கோயில் ஸ்கந்தகிரி என்றுணர்ந்தேன்
ஜோதிப் பிழம்பான சுந்தரனே பழனியப்பா
சிவஞானப் பழமான ஸ்கந்தகுரு நாதா
பழம் நீ என்றதினால் பழனிமலை யிருந்தாயோ?
திருவாவினன் குடியில் திருமுருகனானாயோ?
குமரா முருகா குருகுஹா வேலவனே!
அகத்தியர்க்குத்தந்து ஆட்கொண்டாய் தமிழகத்தை
கலியுக வரதனென்று கலகமுனி உனைப்புகழ்ந்தான்
ஔவைக்கு அருள் செய்த அறுமுகவா ஸ்கந்தகுரோ!
ஒழுக்கமொடு கருணையையும் தவத்தையும் தந்தருள்வாய்
போகருக் கருள்செய்த புவன சுந்தரனே
தண்டபாணித் தெய்வமே தடுத்தாட் கொண்டிடப்பா
ஆண்டிக் கோலத்தில் அணைத்திடுவாய் தண்டுடனே
தெய்வங்கள் போற்றிடும் தண்டாயுத ஜோதியே
ஸ்கந்தகிரி மேலே ஸ்கந்தகிரிஜோதி யானவனே!
கடைக்கண்ணால் பார்த்திடப்பா கருணையுள்ள ஸ்கந்தகுரோ

ராகம் : பிலஹரி

ஏழையைக் காத்திடப்பா ஏத்துகிறேன் உன் நாமம்
உன்னையன்றி வேறொன்றை ஒருபோதும் நம்புகிலேன்
கண்கண்ட தெய்வமே கலியுக வரதனே!
கந்தனென்ற பேர்சொன்னால் கடிதாக நோய்தீரும்

புவனேச்வரி மைந்தா போற்றினேன் திருவடியை
திருவடியை நம்பினேன் திருவடி சாக்ஷியாக
புவனமாதா மைந்தனே புண்ணிய மூர்த்தியேகேள்
நின் நாமம் ஏத்துவதே நான் செய்யும் தவமாகும்
நாத்தழும்பேறவே ஏத்திடுவேன் நின் நாமம்
முருகா முருகா வென்றேமூச் செல்லாம் விட்டிடுவேன்
உள்ளும் புறமும் ஒருமுருகனையே காண்பேன்
அங்கிங் கெனாதபடி எங்குமேமுருகனப்பா!
முருகன் இலாவிட்டால் முவ்வுலக மேதப்பா?
அப்பப்பா முருகனின் அருளே உலகமப்பா
அருளெலாம் முருகன் அன்பெலாம் முருகன்!
ஸ்தாவரஜங்கமமாய் ஸ்கந்தனாய் அருவுருவாய்
முருகனாய் முதல்வனாய் ஆனவன் ஸ்கந்தகுரு
ஸ்கந்தாச்ரமமிருக்கும் ஸ்கந்தகுரு அடிபற்றிச்
சரணம் அடைந்தவர்கள் ஸாயுஜ்யம் பெற்றிடுவர்
சத்தியம் சொல்கின்றேன் சந்தேகமில்லையப்பா
வேதங்கள் போற்றிடும் வடிவேலன் முருகனை நீ
சந்தேஹ மில்லாமல் சத்தியமாய் நம்பிடுவாய்
சத்தியமான தெய்வம் ஸ்கந்த குருநாதன்
சத்தியம் காணவே நீ சத்தியமாய் நம்பிடப்பா!

ராகம் : சுபபந்துவராளி

சத்தியம் வேறல்ல ஸ்கந்தகுரு வேறல்ல
ஸ்கந்தகுருவே சத்தியம் சத்தியமே ஸ்கந்தகுரு
சத்தியமாய்ச் சொன்னதை சத்தியமாய் நம்பியே
சத்தியமாய் ஞானமாய் ஸதானந்தமாகிவிடு
அழிவற்ற ப்ரம்மமாய் ஆக்கிவிடுவான் முருகன்
திருமறைகள் திருமுறைகள் செப்புவதும் இதுவேதான்
ஸ்கந்தகுரு கவசமதைச் சொந்தமாக்கிக் கொண்டு நீ
பொருளுணர்ந்து ஏத்திடப்பா பொல்லாப்பு வினையகலும்
பிறவிப் பிணியகலும் ப்ரம்மானந்தமுண்டு
இம்மையிலும் மறுமையிலும் இமையோருன்னைப் போற்றிடுவர்
மூவருமே முன்னிற்பர் யாவருமே பூஜிப்பர்
அனுதினமும் கவசத்தை அன்புடன் ஜபித்திடப்பா
சிரத்தா பக்தியுடன் சிந்தையொன்றிச் செப்பிடப்பா
கவலைய கன்றிடுமே கந்தனருள் பொங்கிடுமே
பிறப்பும் இறப்பும் பிணிகளும் தொலைந்திடுமே
கந்தன் கவசமே கவசமென்று உணர்ந்திடுவாய்

கவசம் ஏத்துவீரேல் கலியை ஜயித்திடலாம்
கலியென்ற அரக்கனைக் கவசம் விரட்டிடுமே
சொன்னபடிச் செய்து சுகமடைவாய் மனமேநீ
ஸ்கந்தகுரு கவசத்தைக் கருத்தொன்றி ஏத்துவோர்க்கு
அஷ்டைச்வர்யந்தரும் அந்தமில்லா இன்பந்தரும்
ஆல் போல் தழைத்திடுவன் அறுகுபோல் வேரோடிடுவன்
வாழையடி வாழையைப் போல் வம்சமதைப் பெற்றிடுவன்
பதினாறும் பெற்றுப் பல்லாண்டு வாழ்ந்திடுவன்
சாந்தியும் ஸௌக்கியமும் ஸர்வமங்களமும் பெருகிடுமே!

ராகம்: கானடா

ஸ்கந்தகுரு கவசமிதை கருத்திலிருத்தி ஏற்றுவீரேல்
கர்வம் காமக்ரோதம் கலிதோஷ மகற்றுவிக்கும்
முன்செய்த வினையகன்று முருகனருள் கிட்டிவிடும்
அறம் பொருள் இன்பம்வீடு அதிசுலபமாய்க்கிட்டும்
ஆசாரம் சீலமுடன் ஆதிநேம நிஷ்டையுடன்
கள்ளமிலா வுளத்தோடு ஸ்கந்தகுரு கவசந்தன்னை
சிரத்தா பக்தியுடன் சிவகுமாரனை நினைத்துப்
பாராயணம் செய்வீரேல் பார்க்கலாம் ஸ்கந்தனையும்
ஸ்கந்தகுரு கவசமிதை மண்டலம் நிஷ்டையுடன்
பகலிரவு பாராமல் ஒரு மனதாய்ப் பகர்வீரேல்
திருமுருகன் வேல்கொண்டு திக்குகள் தோறும் நின்று
காத்திடுவான் ஸ்கந்தகுரு கவலையில்லை நிச்சயமாய்
ஞான ஸ்கந்தனின் திருவடியை நம்பியே நீ
ஸ்கந்தகுரு கவசந்தனை ஓதுவதை தவமெனவே
உணர்ந்துகொண்டு ஓதுவையேல் உனக்குப் பெரிதான
இகபர சுகமுண்டாம் என்னாளும் துன்பமில்லை
துன்பம் அகன்றுவிடும் தொந்தரவுகள் நீங்கிவிடும்
இன்பம் பெருகிவிடும் இஷ்டஸித்தி கூடிவிடும்
பிறவிப் பிணியகற்றி ப்ரம்மநிஷ்டையும் தந்து
காத்து ரக்ஷிக்கும் ஸ்கந்தகுரு கவசமே!

ராகம் : காபி

கவலையை விட்டு நீ ஸ்கந்தகுரு கவசமிதை
இருந்த படியிருந்து ஏத்திவிடு ஏத்தினால்
தெய்வங்கள் தேவர்கள் சித்தர்கள் பக்தர்கள்
போற்றிடுவர் ஏவலுமே புரிந்திடுவர் நிச்சயமாய்
ஸ்கந்தகுரு கவசம் ஸம்சயப் பேயோட்டும்
அக்ஞானமும் அகற்றி அருள்ஒளியும் காட்டும்

ஞான ஸ்கந்தகுரு நானென்று முன்நிற்பன்
உள்ளொளி யாயிருந்து உன்னிலவ னாகிடுவன்!

ராகம் : மத்யமாவதி

என்னில் உனைக்காட்டி உன்னில் தனைக் காட்டி
எங்கும் தனைக்காட்டி எங்குமுனைக் காட்டிடுவன்
ஸ்கந்தஜோதி யானகந்தன் ஸ்கந்தகிரி யிருந்து
தண்டாயுதம் தாங்கித் தருகிறான் காட்சியுமே
ஸ்கந்தகிரி வந்துநிதம் கண்டுய்மின் ஜகத்தீரே
கலிதோஷ மகற்றுவிக்கும் ஸ்கந்தகுரு கவசமிதைப்
பாராயணம் செய்து பாரில் புகழ்பெறுமின்

ராகம் : மத்யமாவதி

ஸ்கந்தகுரு கவசபலன் பற்றறுத்துப் பரம் கொடுக்கும்
ஒரு தரம் கவசமோதின் உள்ளழுக்குப் போகும்
இரு தரம் ஏத்துவீரேல் எண்ணியதெலாம் கிட்டும்
மூன்று தர மோதின் முன்னிற்பன் ஸ்கந்தகுரு
நான்கு முறை யோதி தினம் நல்லவரம் பெறுவீர்!
ஐந்து முறை தினமோதிப் பஞ்சாக்ஷரம் பெற்று
ஆறு முறையோதி ஆறுதலைப் பெற்றிடுவீர்!
ஏழு முறை தினமோதின் எல்லாம் கவசமாகும்
எட்டு முறை ஏத்திடின் அட்டமா ஸித்திகிட்டும்
ஒன்பது தரமோதின் மரண பயமொழியும்
பத்துதர மோதிநித்தம் பற்றறுத்து வாழ்வீரே!
கன்னிமார் ஓடையிலே நீராடி நீறுபூசி
ஸ்கந்தகுரு கவசமோதி ஸ்கந்தகிரி ஏறிவிட்டால்
முந்தை வினையெல்லாம் ஸ்கந்தன் அகற்றிடுவான்!
நிந்தைகள் நீங்கிவிடும் நிஷ்ட்டையுமே கைகூடும்
கன்னிமார் ஓடைநீரைக் கைகளிலே நீ எடுத்து
ஸ்கந்தனென்ற மந்திரத்தைக் கண்மூடி யுருவேற்றி
உச்சியிலும் தெளித்து உட்கொண்டு விட்டால்
சித்த மலம் அகன்று சித்தஸுத்தியும் கொடுக்கும்
கன்னிமார் தேவிகளைக் கன்னிமார் ஓடையிலே
கண்டு வழிபட்டு ஸ்கந்தகிரியேறிடுவீர்
ஸ்கந்தகிரியேறிஞான ஸ்கந்தகுரு கவசமிதைப்
பாராயணம் செய்துலகில் பாக்யமெலாம் பெற்றிடுவீர்!!

ஓம் ஸுப்ரஹ்மண்யாய நமஃ

ஓம் சௌம் சரவணபவ ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் க்லௌம் சௌம் நமஃ

ஸர்வே ப$_4$வந்து ஸுகி$_2$ந:
 ஸர்வே ஸந்து நிராமயா:|
ஸர்வே ப$_4$த்$_3$ராணி பசயந்து
 மா கஸசித்ர து$_3$:க$_2$ப$_4$ாக்$_3$ப$_4$வேத்||

(எல்லோரும் ஸுகமாக, நோயற்றவர்களாக இருப்பார்களாக, எல்லோரும் நல்லனவற்றையே காண்பார்களாக, எவருக்குமே துன்பம் ஏற்பட வேண்டாம்.)

# செல்வம் நிலைக்க சிறந்த வழி

'எவ்வளவு சம்பாதித்தாலும் கையில் காசு தங்குவதில்லை, ஏதோ ஒரு வழியில் செலவழிந்துவிடுகிறது' என்று பலர் பெருமூச்சு விடுவதுண்டு.

பஞ்சத்தால் வாடிய மக்களின் பசித்துயரைத் தீர்க்க திருவீழிமிழலை என்னும் தலத்தில் பதிகம் பாடி பொற்காசு பெற்றார் திருஞான சம்பந்தர்.

இப்பதிகத்தைப் பாடி சிவபெருமானை வழிபட்டால் நிச்சயம் நற்பயன்கள் விளையும்.



ஸ்ரீ முல்லைவனநாத சுவாமி
திருக்கருகாவூர், இந்தியா.

1. வாசி தீரவே காசு நல்குவீர்
   மாசில் மிழலையீர் ஏசல் இல்லையே.
2. இறைவர் ஆயினீர் மறைகொள் மிழலையீர்
   கறைகொள் காசினை முறைமை நல்குமே.
3. செய்ய மேனியீர் மெய்கொள் மிழலையீர்
   பைகொள் அரவினீர் உய்ய நல்குமே.
4. நீறு பூசினீர் ஏற தேறினீர்
   கூறும் மிழலையீர் பேறும் அருளுமே.
5. காமன் வேவஓர் தூமக் கண்ணினீர்
   நாமம் மிழலையீர் சேமம் நல்குமே.
6. பிணிகொள் சடையினீர் மணிகொள் மிடறினீர்
   அணிகொள் மிழலையீர் பணிகொண்டருளுமே.
7. மங்கை பங்கினீர் துங்க மிழலையீர்
   கங்கை முடியினீர் சங்கை தவிர்மினே.
8. அரக்கன் நெரிதர இரக்கம் எய்தினீர்
   பரக்கும் மிழலையீர் கரக்கை தவிர்மினே.
9. அயனும் மாலுமாய் முயலும் முடியினீர்
   இயலும் மிழலையீர் பயனும் அருளுமே.
10. பறிகொள் தலையினார் அறிவ தறிகிலார்
    வெறிகொள் மிழலையீர் பிறிவ தரியதே.
11. காழி மாநகர் வாழி சம்பந்தன்
    வீழி மிழலைமேல் தாழும் மொழிகளே.

Designed & Printed By : Shanmuganatha Sharma Umakanthan Vidyasaranan (Vidya)
Chennai, India. Ph : +91 94441 28827